பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 16 சனிக்கிழமை (31.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

# பொறுப்புக் கூறுங்கள்

## இல்லையேல் சாகும்வரை போராடுவோம்; வடக்கு, கிழக்கில் நேற்று உறவுகள் வலியுறுத்து

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் கடந்தகால அரசைப் போலவே நல்லாட்சி அரசும் தங்களை ஏமாற்றி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள், இவ்விடயத்தில் பொறுப்புக் கூறல் மற்றும் சர்வதேச நீதிப் பொறிமுறையையே தாம் தொடர்ந்து வலியுறுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்தோடு தங்களுக்கு காத்திரமான தீர்வு கிடைக்காவிட்டால் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

(23-ம் பக்.)



## இந்திய மீனவர்கள் அனைவரும் விடுதலை

(கொழும்பு)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் கீழ் விடுதலை செய்வதென அரசாங்கம் தீர்மானித்து அறிவித்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர.

இலங்கை கடற்பரப்பை ஊடுருவும் இந்திய மீனவர்களின் எண்

23ஆம் பக்கம் பார்க்க....

## கருணைக்காலம் நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

அபராதத் தொகை அறவிடப்படாமல் வாகன பரிமாற்றத்திற்காக வழங்கப்பட்டிருந்த கருணைக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இதற்காக மீண்டும் கருணைக் காலம் வழங்கப்படமாட்டாது என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமது பெயருக்கு மாற்றப்படாத

23ஆம் பக்கம் பார்க்க....

# ஒரு நாடாக நாம் ஒன்றிணைவோம்!

## மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்


(கொழும்பு)

நாட்டு மக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியை கடந்து செல்வதாக தெரிவித்துள்ள த.தே.கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், புதுவருடத்தில் இருள் சூழ்ந்த கடந்த காலத்தை பின்தள்ளி ஒரு நாடாக ஒன்றிணைந்து செளபாக்கியத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அனை

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள கோவில் நிலங்களை அளவிடுங்கள்

### சட்டவிரோத விஸ்தரிப்பு உள்ளதாக சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை ஆராய்வதற்கு முன்னர் அங்கு பல மடங்குகளில் விஸ்தரிக்கப்பட்டுள்ள கோவில்கள் மற்றும் இஸ்லாமிய மதத் தலங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென மேல்மாகாண அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை திருகோணேஸ்வரம் சிவன் கோவில் அனைமையில் 5 மடங்குகள் அதிகரிக்க

04ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனின் உருவப்படம் வவுனியாவில் எரிப்பு!



(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவரும் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனின் உருவப்படம் நேற்று வவு

24ஆம் பக்கம் பார்க்க....

## மகா நாயக்கர்களின் யோசனைப்படி புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

### பிரதமர் தலைமையில் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் புதிய அரசியலமைப்பு மற்றும் அரசியல் தீர்வு ஆகியவற்றை மகாநாயக்க தேரர்களின் யோசனைப படி தயாரிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்கள் இருவரையும் சந்தித்த் பின்பே மேற்படி முடிவை அக்கட்சி எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களை சந்தித்துப் பேசினார். அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் பேசுவதற்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் கருத்து விசர்த்தனமானது

(பதுளை)

2017ஆம் ஆண்டில் அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்து விசர்த்தனமான கதை என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளை பசறையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்

23ஆம் பக்கம் பார்க்க....

## பொது பல சேனாவுக்கும் எமக்கும் "டீல்" இது இவ்வாண்டின் மிகப்பெரும் ஜோக் - மனோ

(கொழும்பு)

பொதுபல சேனா மற்றும் பொது எதிரணி எம்பிகளான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோருக்கும் எமக்குமிடையில் இரகசிய உடன்படிக்கை உள்ளது என்றும் நள்ளிரவில் நாம் சந்தித்து உரையாடுகிறோம் என்றும் நண்பர் அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

இது இன்றுடன் முடியும் இந்த ஆண்டின் மிகப்பெரும் நகைச்சுவை 2016-ம் ஆண்டின் மிகச்சிறந்த சிரிப்பு அமைச்சர் என்ற பட்டத்தை நண்பர் டிலான் பெரேராவுக்கு நான வழங்குகிறேன் என தேசிய சகவாழ்வு

23ஆம் பக்கம் பார்க்க....



DCM
A/L 2019
ஆரம்பம்:07.01.2017
யாழ்.நகரில் 9.00 am
சுன்னாகத்தில் 3.00 pm
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
D.C.M

# 20ஆவது பிறந்தநாளும் 4ஆம் மாத நினைவஞ்சலியும்

## வெற்றிவேலு பிரசாந்தி

மலர்வு 31 - 12 - 1996

உதிர்வு 31 - 08 - 2016



அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்துப் பக்குவமாய் வழிநடந்த
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்க்கும் நல்லதாய்
எல்லோர் மனதிலும் இருந்த எம் பிரசாந்திக் குட்டியே!

ஏனோ இறைவன் இடைநடுவில் பறித்து விட்டான்
விழுந்ததம்மா எங்கள் காதுகளில்
உன் மரணத்தின் இடியோசை
நம்பமுடியாமல் இருந்ததம்மா-அந்த

நொடிப்பொழுதுகள் கண்கள் கலங்குதம்மா-எம்
கண்ணிமைக்கும் கணத்தில் நீ-காலைப்பொழுதினிலே
எம்மை விட்டு எங்கு சென்றாய்!
எவரையும் காயப்படுத்தாத எம் பிள்ளை மீது-ஏன்

இந்த தாங்க முடியாத துயரம் நிகழ்ந்ததம்மா?
உயர்தரப் பெறுபேறுகளை எம்முடன் விட்டுவிட்டு சென்று விட்டாய்
நேற்றுவரை எம்மோடு இருந்தாய்-எங்களில் ஒருவராய் அன்போடு வளர்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திடுவாய் என்றிருக்க

கண்ணீரைத் தந்துவிட்டு-விண்ணோடு நீ போனாயம்மா!
ஆற்றொணாத்துயரம் ஊற்றாகி ஓடுதம்மா!
உதிர்ந்து விடவில்லையே இன்றும் உன் புன்னகை முகம்
உலர்ந்து விடவில்லையே எம் கண்ணீர்த்துளிகள்

அம்மாவின் அழுகுரல் கேட்கவில்லையோ!
அனைவரின் கண்களில் ஈரம் காயவில்லையம்மா
ஓடி மறைந்ததம்மா நான்கு மாதங்கள்
உன் நினைவுகள் ஓராயிரம் ஆண்டுகள்

சென்றாலும் மறைந்திடுமா?
பண்புள்ளோரைப் பல காலம் வாழக் கூடாதென்றா?
உம்மை ஆண்டவன் அழைத்தான்
எல்லாம் இருந்தும் இன்று நீயில்லையே!

புலர்ந்து விடும் ஒவ்வொரு பொழுதுகளிலும்-உன்
மலர்ந்துவிடும் முகம் காண பார்த்திருக்கும் எம் விழிகள்
கலைந்துவிடும் கனவுகளைக் காணும் எம் கண்முன்னே
நிலைத்துவிடும் ஓர் உறவாய் எம் குடும்பத்தில்
நீயும் வர அழைத்து நிற்கிறோமம்மா எம்முடனே!

"பிரசாந்தி வாசா"
எல்லை ஒழுங்கை
தும்பளை
பருத்தித்துறை
தொ.பே:-0212056096

-குடும்பத்தினர்

(C-6918)

# சத்திரசிகிச்சை உபகரணங்களின் விலைகளைக் குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

ஔடதங்களின் விலையைக் குறைப்பதுடன் சத்திரசிகிச்சை உபகரணங்களின் விலைகளையும் குறைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்குத் தேவையான பொறிமுறையைத் தயாரிக்குமாறு தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சிலவற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் மருத்துவ கருவிகளின் விலைகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் முதற்கட்டமாக கண் வில்லைகளுக்கான விலையைக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 6000 ரூபாவிற்கு கண்வில்லைகளைக் கொள்வனவு செய்து, நோயாளர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. அதற்கமைய, கண் வில்லைகளுக்கான விலை நிர்ணயிக்கப்படவுள்ளதோடு, கண் வில்லைகளை 10,000 ரூபாவிற்கு விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)


நடமாடும் மிருக வைத்திய சேவை

சுன்னாகத்திற்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு



தொடர்பு: Dr.K.கிருபாகரன்
Cell : 077 973 8802
Ph : 021 224 2102

(7322)

வேலை ஆள்தேவை

பருத்தித்துறையில் இயங்கி வரும் பேக்கரிக்கு சிற்றுண்டி வகைகள் தயாரிக்கத் தெரிந்தவர் உடன் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.
தொடர்பு:-
0771632873

(சி-6928)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

புதிய உதயம்

World for Science at NEC
(ஆனைப்பந்தி, பெருமாள் கோவிலடி)

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 2019 உயர்தர விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
01.01.2017 (ஞாயிற்றுக்கிழமை)
Batch -I 9.00AM
Batch -II 3.00PM

Com.Maths.S.விமலநாதன் Bsc
Physics.S.எடிசன் Bsc
Biology K.சுதாகரன் Bsc
Chemistry S.வாசு Bsc

தொடர்புகளுக்கு:-நிர்வாகி 0774696695

(7329)

வீடு வாடகைக்கு தேவை

மல்லாகம், சுன்னாகம், ஏழாலை மேற்கு போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை. (சிறிய குடும்பத்திற்கு)
தொடர்புகளுக்கு:-
0773822266

(7326)

கோழி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் (கல்பேட்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன்,நல்லூர்

(C-6925)

New Sky Computer Training Center
இல.716 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

தனியாக/ குழுவாக கற்பிக்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
02-01-2017

அனுபவமிக்க ஆசிரியர் குழாம்

- Microsoft Office 2016 - 3 Months
[Word, Excel, Access, PowerPoint, Publisher]
- Desktop Publishing - 3 Months
[Photoshop CC, PageMaker7.0, InDesign CC, Illustrator CC, CorelDraw X7]
- Graphic Designing - 3 Months
- Hardware Technology - 2 Months
- Web Designing - 3 Months
- Computerized Accounting - 3 Months
- Internet & E-mail - 1 Month
- Computer Type Setting - 2 Months
- Kids Programe (சிறுவர்களிற்கானது)

Discount 10%

ICT G10, G11

GIT - A/L

சிங்களம்
அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

TP:0779672038
E-MAIL:KRCOLINS@GMAIL.COM

(C-6926)

# பொதுபல சேனா அமைப்பை உருவாக்கியவர் சம்பிக்கவே!

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொதுபல சேனா அமைப்பை உருவாக்கியவர் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் இலங்கை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.**



மேலும் 2020 ஆம் ஆண்டு பாட்டலி சம்பிக்க ரணவக் கவே ஜனாதிபதியாக இருப் பார் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலா ளர் கலகொட அத்தே ஞான சாரதேரர் தெரிவித்திருந்தார் என்றும் மகிந்த குறித்த சந்திப்பின் போது சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், ரண வக்க தனது அரசியல்பாதையை சவாலாக ஏற்றுக் கொள்ள மாட்டார் எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டில் சிறுபான்மை சமுதாயத்தினர் மத்தியில் தனக்கு ஆதரவு குறைந்த மையினாலேயே தான் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த தாக மகிந்த இதன்போது தெரிவித்துள்ளார். (இ-3)

### மாணவர்களைப் பாதுகாப்பது அவசியம்

## யாழிலுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும்

### அதிகாரிகளுக்கு அரச அதிபர் அறிவிப்பு

டெங்கு நோய் தொற்றில் இருந்து மாணவர்களை பாது காக்கும் வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள அனை த்து பாடசாலைகளிலும் விரை வில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அறி வித்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாடு தொடர் பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவ ட்ட அரச அதிபர் நா. வேத நாயகன் தலைமையில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலின் போதே மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் ஒருமாத கால விடுமுறை யின் பின்னர் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பிக்கவு ள்ளன.

அந்த வகையில் மாண வர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் பாடசா லைச் சூழல்களை விரை வில் சுத்தப்படுத்த அதிகாரி கள் மற்றும் பாடசாலை நிர் வாகத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு தொற்று அதிகமாக இருப்ப தனால் அதில் இருந்து மாண வர்களை பாதுகாக்கும் செய ற்பாடுகளை அதிகமாக மேற் கொள்ள வேண்டும். டெங்கு பரவும் இடங்களை அடை யாளப்படுத்தி அவற்றை அப் புறப்படுத்த வேண்டும்.

மேலதிக உதவிகள் தேவை ப்படும் பட்சத்தில் அந்தந்த பகுதி சுகாதார வைத்திய அதிகாரியை சந்தித்து உதவி களை பெற்றுக்கொள்ள முடி யும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

### 2016 ஆம் ஆண்டில் மட்டும்

## யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயினால் மூன்று பேர் உயிரிழப்பு ; 1709 பேர் பாதிப்பு

06 ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு இளைஞர்கள் பலி

(கொழும்பு)

வெலிப்பனை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விப த்தில் இரண்டு இளைஞ ர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக் கிள் பாதையை விட்டு வில கியமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

விபத்தின் பின்னர் நாகொட வைத்தியசா லையில் அனு மதித்ததை அடுத்தே இளை ஞர்கள் இருவரும் உயிரிழ ந்துள்ளனர்.

ஹொரவலை மற்றும் எலமுல்ல பகுதியை சேர்ந்த 21 மற்றும் 25 வயதுடைய இளைஞர்களே விபத்தில் சிக்கியவர்கள் எனவும் குறி த்த விபத்து தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற தாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (இ-3)

## குழப்பங்களை ஏற்படுத்துவது கூட்டு எதிர்க்கட்சியினர் தான்

### ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு புலிகளின் கைக ளுக்கு சென்று விட்டதாக கூறி கூட்டு எதிர்க்கட்சியினர் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ண சிங்க குற்றம் சுமத்தி னார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவி க்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கும் போது,

பயங்கர குற்றங்களுடன் தொடர்புடைய விடுதலைப் புலிகளை விசாரணை செய்வ தற்கு விஷேட நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

அதுவும் நீதிமன்றத்திற்கு உள்ளேயே இவ்வாறான நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் விடு தலைப்புலிகள் என சந்தேகப் படுகின்றவர்களுக்கு எதிரா கவும் விசாரணைகள் நடத்த ப்படுகின்றது.

ஆனாலும் ரவிராஜ் கொலை வழக்கிற்கும் விஷேட நீதி மன்றம் ஒன்று அமைக்கப் பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும். ஆனாலும் அதனை செய்யவில்லை. இதுபோ ன்று பல வழக்குகள் காணப் படுகின்றன.

மேலும் பிரதானமான ஊழல்கள் தொடர்பான வழ க்குகளுக்கும் விஷேட நீதி மன்றத்தினை அமைத்து முடிவுக்கு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும் எனவும் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேலும் தெரி வித்தார். (இ-3)

## அரிசி மாபியாவுக்கு பின்னால் ஜனாதிபதியின் சகோதரராம்!

### அஜித் பி.பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

அரிசி மற்றும் நெல் மாபி யாவுக்கு பின்னால் இருப்பது அமைச்சர் ஹரிசன் அல்ல என்பது முழு நாட்டுக்கும் தெரியும் எனவும் இதற்குப் பின்னால் இருப்பது ஜனா திபதியின் சகோதரராக இருக்கலாம் எனவும் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.





மின்சாரம் உற்பத்தியா கும் போது டீசல் மாபியா நடை பெறுவதைப் போன்று, நெல்லிலும் மாபியா நடை பெறுவதாகவும் இதற்கு பாரிய அளவான நெல் ஆலை உரிமையாளர்கள் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறானவர்கள் ஊட கங்கள் மூலம் பல்வேறு அறிக்கைகளை விட்டு குழப் பம் ஏற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# தென்னாபிரிக்காவின் வேகத்தில் சுருண்டது இலங்கை அணி



இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 206 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபத் கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் முதலாவது இனிங்ஸில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, அனைத்து விக்கட்களையும் இழந்து 286 ஓட்டங்களை பெற்று கொண்டது.

இந்நிலையில், முதல் இனிங்ஸில் இலங்கை அணி 205 ஓட்டங்களை பெற்று கொண்டது. 85 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா அணி 6 விக்கட்களை இழந்து, 406 ஓட்டங்களை பெற்று கொண்டது.

முதலாவது டெஸ்ஸில் இலங்கை அணிக்கு 488 ஓட்டங்கள் வெற்றி இலக்காக அமைந்தது. நேற்று முன் தினம் ஆட்ட நிறைவில் 240 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களை இழந்திருந்த இலங்கை அணியினர் இறுதி நாளான நேற்று 248 பன்னிலையில் தனது ஆட்டத்தினை ஆரம்பித்தது.

ஆரம்பம் முதலே தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சில் தடுமாறிய இலங்கை அணி அனைத்து விக்கட்களையும் இழந்து 281 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

இதற்கமைய, தென்னாரிக்க அணி தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் 206 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. தென்னாபிரிக்க அணி சார்பாக இரண்டாவது இனிங்ஸில் சதம் அடித்த ஸ்டீபன் குக் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)



## இந்த அழகுச்சிலை இனி விளையாடாது



பிரபல டென்னிஸ் வீராங்கனை அனா இவானோவிக் (செர்பியா). முன்னாள் நம்பர் வன் வீராங்கனையான அவர் டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென்று அறிவித்துள்ளார்.

2008-ம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் சம்பியனான அவர் கூறுகையில், "இது கடினமான முடிவாக இருக்கும். ஆனால் இதில் கொண்டாட பல விடயங்கள் உள்ளன என்றார்.

13 ஆண்டுகள் டென்னிஸ் விளையாடிய அவர், காயத்தால் அவதிப்பட்டு வந்த இவானோவிக் ஓய்வு முடிவை எடுத்துள்ளார்.

# 2016 திரும்பிப்பார்க்க வைத்த புகைப்படங்கள்

உலக கிரிக்கெட் அரங்கில் ரசிகர்களால் மறக்க முடியாத கிரிக்கெட் போட்டிகள் நிறைய உள்ளன.

அதில் 2016 ஆம் ஆண்டு ரசிகர்கள் மனதில் என்றென்றும் நீங்கா இடம் பிடித்த கிரிக்கெட் போட்டிகள் மற்றும் அதன் புகைப்படங்கள் பற்றிய தொகுப்பே இது.

**அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் (இரவு - பகல் டெஸ்ட் போட்டி)**

பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான இரவு, பகல் டெஸ்ட் போட்டி கபாவில் உள்ள பிரிஸ்பெனில் நடைபெற்றது.

இப்போட்டியின் போது ரசிகர்கள் அங்குள்ள சிறிய நீச்சல் குளம் போன்று வடிவமைக்கப்பட்ட தண்ணீரின் மீது துள்ளிக்குதித்து போட்டிகளை கண்டுகளித்தனர்.

அந்த இரவு நேர போட்டியின் போது இது தொடர்பாக எடுக்கப் பட்ட புகைப்படம் இணையத்தில் உலா வர ஆரம்பித்தது.

**இந்தியா - பங்களாதேஷம் (இருபது - 20 போட்டி)**

இந்தியா, வங்கதேசம் மோதிய இந்தப் போட்டியை எந்த ஒரு கிரிக்கெட் ரசிகராலும் அவ்வளவு எளிதில் மறந்து விட முடியாது.

உறுதியாக சொல்லலாம் இந்த ஆண்டின் சிறந்த இருபது-20 போட்டி இது தான் என்று.

லீக்சுற்றில் பாகிஸ்தானை வென்ற பிறகு வங்கதேசத்தை சந்தித்தது இந்திய அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா வங்கதேச பந்து வீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் சராசரிக்கும் குறைவான ஓட்டங்களையே எடுத்தது இந்தியா.

147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கியது பங்களாதேசம்.

எந்தத் துடுப்பாட்டக்காரரும் இந்திய பந்துவீச்சாளர்களுக்கு கட்டுப்படவில்லை, எளிதாக ஓட்டங்கள் வந்தது. கடைசி ஓவரில் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவை.

இறுதியில் 3 பந்துகளுக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இப்படிப் பட்ட பரபரப்பான ஆட்டத்தில் இந்திய அணி த்ரில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றிக்கு காரணமான டோனி, வங்கதேச வீரர் முஸ்தபிசூர் ரகுமானை ரன் அவுட் செய்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் தான் சமூகவலைத்தளங்களில் வெகுவாக பகிரப்பட்டதாக கூறப்படுகிறது.




**மேற்கிந்திய தீவுகள் அணி**

மேற்கிந்திய தீவுகள் அணியால் இந்தாண்டை மறக்கவே முடியாது.

காரணம் மேற்கிந்தியத்தீவு அணியின் ஆண்கள் கிரிக்கெட் அணியினரும், பெண்கள் கிரிக்கெட் அணியினரும் இருபது - 20 போட்டிக்கான உலகக்கோப்பைத் தொடர்களை வென்று அசத்தினர்.

அப்போது இரு அணியினரும் ஒரே மைதானத்தில் ஆட்டம் போட்ட புகைப்படம் தீயாய் பரவியது.





**ஐதராபாத் - பெங்களூர் (ஐ.பி.எல்)**

இந்திய ரசிகர்கள் மட்டுமன்றி உலக ரசிகர்கள் அனைவரும் விரும்பிப் பார்க்கும் போட்டியாக மாறிவிட்டது ஐ.பி.எல்.

அப்படிப்பட்ட ஐ.பி.எல. போட்டியின் சம்பியன் பட்டத்தை இந்தாண்டு சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி தட்டிச்சென்றது. இந்த அணி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை இறுதி ஆட்டத்தில் வென்றது.




## வடக்கு, கிழக்கு ....

ப்பட்டு விஸ்தரிக்கப்பட்டமை தொடர்பில் எவரும் இதுவரை வாய்திறக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு நேற்றுமுன் தினம் வழங்கிய விசேட நேர்காணலின் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் சுமார் மூன்று இலட்சம் தொல்பொருள் இடங்கள் உள்ளதோடு இதில் பாதுகாக்கப்பட வேண்டிய 12 ஆயிரம் இடங்கள் காணப்படுகின்றன.

தொல்பொருட் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஆளணி மிகவும் மந்த கதியில் இயங்குகின்றது. அதன் காரணமாக தொல்பொருள் இடங்கள் அடையாளம் காணமுடியாத அளவிற்கு சிதைவடைந்துள்ளன.

உதாரணமாக, பிரித்தானியரின ஆட்சியின்போது டேவி என்பவர் வெளியிட்ட நினைவுகள் என்ற நூலில் ருவன்வெலிசாய தூபி ஒரு பாரிய மலையைப் போன்றே காட்சியளித்ததாக கூறியுள்ளார்.

எமக்கு நினைவுதெரிந்த காலத்திலிருந்து அபேகிரிய தொல்பொருடசின்னமும் பற்றையினால் சூழப்பட்ட மலையைப் போன்றே காட்சியளிக்கிறது.

அதேபோல வடக்கு, கிழக்கு பகுதிகளில் காடுமண்டிய மலையைப் போன்று பல்வேறு இடங்களில் தூபிகள் காணப்படுகின்றன.

இதுகுறித்து தெரியாதவர்கள் அதன் மீது விவசாயத்தையும், வீடு கட்டுதலையும் செய்கின்றனர்.

அந்த நடவடிக்கைகளில் புராதன சின்னங்களின் கற்கள் தென்பட்டால அதனை யாரிடமும் கூறாமல் இரகசியமாக அகற்றுகின்றனர்.

எனவே மதத் தலங்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் பௌத்த தலங்கள் அமைக்கப்பட்டுவருவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

எனினும் பல மதப் பிரிவினர் அப்பகுதிகளில் ஏற்கனவே காணப்பட்ட தமது தலங்களை' விஸ்தரித்து நிர்மாணித்துள்ளனர்.

உதாரணமாக திருகோணகோணேஸ்வரம் கோவில் இருந்ததைப் பார்க்கிலும் 5 மடங்கு அதிகமாக விஸ்தரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளனது.

அதேபோன்று புதிய கோவில்களும், கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத் தலங்களும் மட்டக்களப்பு தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

எனவே 1990ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையிலும், யுத்தத்திற்குப் பின்னரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மதத் தலங்கள் மற்றும் அதன் விஸ்தரிப்பு தொடர்பாக கணக்கெடுப்பை மத விவகார அமைச்சுக்கள் நடத்தி போலிக் குற்றச்சாட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" - என்றார்.

இதேவேளை மாகாண சபை முறைமையை தோற்கடிப்பதற்கு இணங்காத முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே வடமாகாண சபையின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு கூற வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதன்போது குற்றம் சுமத்தினார்.

"2013ஆம் ஆண்டில் வடமாகாண சபையை அமைப்பதற்கு முன்னர் மாகாண சபை முறையை மாற்றியமைப்பதற்கு முன்வைக்கப்பட்ட யோசனையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மிகவும் தான் தோன்றித்தனமாக புறக்கணித்தார்.

நாங்கள் மட்டுமல்ல, இன்று மஹிந்த ராஜபக்சவுடன் கைகோத்திருக்கும் ஒன்றிணைந்த எதிர் கட்சியினரும் இந்த விடயத்தில் குற்றவாளிகள்தான் எனத் தெரிவித்தார். (செ - 11)

## யாழ்.பல்கலை. மாணவர்கள் படுகொலை

# குற்றப்புலனாய்வு அதிகாரி மேலதிக அறிக்கை தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி குளப்பிட்டி பகுதியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை பொலிஸார் சுட்டு படுகொலை செய்த வழக்கு விசாரணையில் தமது விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தியாகவில்லை என குறிப்பிட்டு அது தொடர்பான மேலதிக அறிக்கையொன்றை இவ் வழக்கினை விசாரணை செய்து வரும் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரி யாழ்.நீதி மன்றில் தாக்கல் செய்துள்ளார்.

சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கைப்பற்றப்பட்ட கண்காணிப்பு கமரா வீடியோ பதிவானது தெற்கு பல்லைக்கழகமொன்றிற்கு பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டிருந்த நிலையில் அதன் பகுப்பாய்வு அறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. மேலும் அரச இராசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த தடயப் பொருட்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகளும் இன்னமும் கிடைகக்பெறவில்லை எனவும் சி.ஐ.டியினர் நீதிமன்றில் கூறியுள்ளனர்.

இதற்கமைய இவ் வழக்கின் எதிரிகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்க யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் உத்தரவிட்டுள்ளார். கடந்த ஒக்டோபர் மாதம் யாழ்.குளப்பிட்டி பகுதியல் வைத்து மோட்டார் சைகிள் ஒன்றில் பயணித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் குறித்த இருமாணவர்களும் உயிரிழந்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தை சேர்ந்த ஐந்து பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வு பொலிஸார் மேற்கொண்டு வந்திருந்தனர். அத்துடன் சம்பவமானது யாழ். நீதவான் நீதிமன்ற நியாயாதக்க எல்லைக்குள் இடம்பெற்றதனால் அவ்வழக்கு விசாரணையானது யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கானது யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையாகியிருந்தார். இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணை நடவடிக்கையின் போது. மன்றில் பிரசன்னமாகியிருந்த குற்றப் புலனாய்வு பொலிஸ் அதிகாரி குறித்த வழக்கு தொடர்பாக தம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் புலன் விசாரணைகளானது இன்னமும் பூர்த்தியாகவில்லை என தெரிவித்ததுடன்,

அது தொடர்பான அறிகைகை ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார்கள். குறிப்பாக இவ் வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கைப்பற்றப்பட்ட கண்காணிப்பு கமரா வீடியோ பதிவானது தெற்கு பல்லைக்கழகமொன்றிற்கு பகுப்பாய்வுக்காக அனுபப்பட்டிருந்த நிலையில் அதன் பகுப்பாய்வு அறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. மேலும் அரச இராசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த தடயப் பொருட்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகளும் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என குற்றப் புலனாய்வு அதிகாரி சமர்ப்பித்த மேலதிக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை தொடர்ந்து குறித்த வழக்கின் எதிரிகளாக உள்ள ஐந்து பொலிஸ் அதிகாரிகளையும் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் அதுவரை இவ் வழக்கை ஒத்திவைக்கவும் யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் வி.ரி. சிவலிங்கம் உத்தரவிட்டிருந்தார். (இ-4)

## மருதங்கேணி மாணவிக்கு ஜனாதிபதியால் கௌரவிப்பு



சமுர்த்தி 'கெக்குலு' சிறுவர் கழக தேசிய கலாசார மற்றும் இலக்கிய போட்டிகளில் பத்து வயது பிரிவு அறிவிப்பாளர் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மனோரஞ்சன் டிலானி முதலாம் இடத்தைப் பெற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (இ-60)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தாயின் மடியில் 17.08.1946

சிவன் அடியில் 02.12.2016

எமது குடும்பத் தலைவி அமரர் சரோஜினிதேவி அருணகிரிநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர், சரவணை கிழக்கு, வேலணை)

கடந்த 02.12.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் சரோஜினிதேவி அருணகிரிநாதன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 31.12.2016 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் இல 527,நாவலர் வீதி,தியாகி அறக்கொடை நிலையத்தில் (TCT) நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத்தலைவி நோயுற்ற காலத்தில் பல்வேறு மருத்துவ உதவிகளைப் புரிந்த தெல்லிப்பழை,யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள்,வைத்திய அதிகாரிகள்,தாதிமார்கள், ஊழியர்களுக்கும் மரணச்சடங்கிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றி பல்வேறு வழிகளிலும் ஆறுதல் கூறிய உற்றார்,உறவினர்கள், நண்பர்களுக்கும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், சமூகத்தவர்களுக்கும் ஏனைய தொண்டு நிறுவனத்தவர்களுக்கும் ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

54, வேம்படி வீதி,
(சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி வீதி)
யாழ்ப்பாணம். (7306)

தகவல்:-
குடும்பத்தினர்.


## இராசி பலன்

31.12.2016

(மார்கழி 16, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு

துதியை பிற்பகல் 3.06 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 3.16 மணிவரை

சுபநேரம் 3.29-4.59 மணிவரை

இராகுகாலம் 9.29-10.59 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம் | | |
| சந் | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மீனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** குடும்பத்தில் நிலவிவந்த மனஸ்தாபங்கள் அகலும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**மிதுனம்:** எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, வேலைச்சுமை கூடும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** பொதுநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படும், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், எதிர்ப்புகள் மாறும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் போட்டிகள் மாறும்.

**தனுசு:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும் வாய்ப்புண்டு.

## 2016 ஆம் ஆண்டில் மட்டும்

# யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயினால் மூன்று பேர் உயிரிழப்பு; 1709 பேர் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் காரணமாக இந்த வருடம் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஆயிரத்து 709 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்களுக்கு போதிய ளவு விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் பொதுமக்கள் கூடிய அக்கறை செலுத்துவதில்லை எனவும் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படடுள்ளது.

டெங்கு கட்டுப்பட்டு தொடர்பாக உரிய அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 171 பேருக்கு டெங்கு தாக்கம் இருப்பதாக இனங்காணப்பட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்தல்கள் கிடைக்கப்பெற்றன.

அவர்களில் ஆயிரத்து 709 பேருக்கு டெங்கு நோய் தொற்று இருப்பதாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுடன், டெங்கு நோய் தாக்கத்தால் இந்த வருடத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த ஜனவரி மாதம் 463 பேரும் பெப்ரவரி மாதம் 199 பேரும் மார்ச் மாதம் 131 பேரும் ஏப்ரல் மாதம் 75 பேரும் மே மாதம் 46 பேரும் ஜூன் மாதம் 61 பேரும் ஜூலை மாதம் 157 பேரும் ஓகஸ்ட் மாதம் 110 பேரும் செப்டெம்பர் மாதம் 92 பேரும் ஒக்டோபர் மாதம் 77 பேரும் நவம்பர் மாதம் 101 பேரும் டிசெம்பர் மாதம் 197 பேருமாக மொத்தம் ஆயிரத்து 709 பேர் இந்த வருடம் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளமை பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை ஆகிய பிரதேசங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை இந்த வருடம் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் உள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைக் குட்பட்ட பிரதேசங்களில் 336 பேருக்கு டெங்கு நோய் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த வகையில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 71 பேரும் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 56 பேரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 47 பேரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 45 பேரும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 25 பேருக்கும் டெங்கு நோய்த் தாக்கம் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளதாக அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 20 பேரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 19 பேரும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 18 பேரும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 பேரும் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 பேரும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 பேரும் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதிகூடிய டெங்கு நோய் தொற்று காணப்படும் பகுதிகளில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் பொலிஸாரின் உதவி தேவைப்படின் அவற்றை பெற்றுக்கொண்டு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என அந்தந்த பிரதேச செயலர்களுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளதுடன்.

எதிர்வரும் ஒரு மாத காலத்துக்கு அனைத்து பிரதேச செயலகங்கள்,பிரதேச சபைகள், பொலிஸார், சுகாதார வைத்தி அதிகாரிகள் இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு விசேட செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் அரச அதிபரால் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-9)

## மாட்டிறைச்சி மீட்பு

அனுமதிப்பத்திரமின்றி மாட்டிறைச்சியை எடுத்துச் சென்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் அதனைக் கைவிட்டு தப்பிச் சென்றதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்த போது மந்திகைப் பகுதியில் 33 கிலோகிராம் மாட்டிறைச்சியை எடுத்து வந்தோர் பொலிஸாரைக் கண்டதும் இறைச்சி எடுத்துவந்த பெட்டியுடன் அதனைக் கைவிட்டுதப்பிச்சென்றுள்ளதாகபொலிஸார் தெரிவித் தனர். (இ-60)




## சாயி நிலையத்தில் புத்தாண்டு பஜனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயிசேவாநிலையத்தில்நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புத்தாண்டு விசேட பஜனை இடம்பெறும்.

சாயி நிலையத் தலைவரின் புத்தாண்டு வாழ்த்துரையுடன்காலை 8.30 மணிக்குநிகழ்வுகள்நிறைவடையவுள்ளன.

மாலை 4.30 இற்கு வழமையான ஞாயிறு பஜனை இடம்பெறும். (இ


## கஜமுகா சூரன் போர்

யாழ்.வண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய கஜமுகா சூரன் போர் நாளை மறுதினம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும். (இ-3)

## யாழ். இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு


யாழ்.இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்தக் கலையரங்கு இன்று 31ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஓய்வு

பெற்ற இசை ஆசி ரியர் மிருதங்க வித்துவான், கலாபூஷணம் எஸ்.வரதராஜ சர்மா கலந்து கொள்வார். (இ-3)









கட்டுவன் கரண்டக் குளம் ஐயப்பன் கோவில் தேர்த் திருவிழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

# பெரும் இழுபறி நிலையில் எல்லை நிர்ணய விவகாரம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில், அந்த அறிக்கை தொடர்பில் எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அஷோக்க பீரிஸிக்கும், அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

குறித்த எல்லை நிர்ணயம் பற்றிய தமது அறிக்கை பூர்த்தியாகி விட்டதாக அஷோக்க பீரிஸ் திட்டவட்டமாகத் தெரிவித்த போதிலும் அது இன்னும் பூர்த்தியாகவில்லை என கமல் பத்மசிறி அடம் பிடிப்பதுடன், அவ்வாறான முறையற்ற அறிக்கை ஒன்றை அமைச்சர் ஏற்றுக்கொள்ள மாட்டார் என கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டிய எல்லை நிர்ணய அறிக்கை தற்சமயம் சிங்கள மொழியில் மாத்திரமே இருக்கின்றது எனவும், அதை ஏனைய இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்வதற்கு தாமதம் ஏற்படும் எனவும் அமைச்சு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. எனவே அஷோக்க பீரிஸ் தலைமையிலான எல்லை நிர்ணயக் குழு 2015 டிசெம்பர் முதலாம் திகதி தனது பணியை ஆரம்பித்துள்ளது.

இதன் அறிக்கை 2016 நவம்பர் 8ஆம் திகதி கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதன்பின் டிசெம்பர் 15 இற்கும், டிசெம்பர் 27இற்கும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும், அறிக்கை இதுவரை கையளிக்கப்படவில்லை.

அறிக்கை தற்போது பூர்த்தியாகி விட்டதாக அஷோக்க பீரிஸ் தெரிவித்த போதிலும் அதை அமைச்சரிடம் கையளிக்க முடியாத நிலையில் அவருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் ஏற்பட்டிருக்கும் கருத்து முரண்பாடு அரசியல் அவதானிகள் மத்தியில் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)


## தேவை

லான்சர் 90 ஜப்பான் மோட்டார் சைக்கிள் தேவை.

தொடர்புகளுக்கு:-077 618 3885 (7335)



## யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்,

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

*யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை*

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

**வவுனியாவில் (024) 324 4444**
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

*(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)*

*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*


## ஒளிவிழா

மருதடி முதியோர் சங்கத்தின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஜே/77 மருதடி கிராம சேவகர் அலுவலகத்தில் இடம்பெறும். க.கணபதி தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்சகோதரிஅருள்சீலி கலந்துகொள்வார். (இ-3)


## விற்பனைக்கு

புதுவருடத்தை முன்னிட்டு புறொயிலர் (சுத்தம் செய்தது) 1Kg 450/- அத்துடன் எம்மிடம் ஊர்ச் சேவல், கல்பேட், பேரன்ஸ் முட்டை என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தாசன் பாம்
158/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (7321)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### சித்த மருத்துவ அலகு
**2015/2016 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவ பிரிவுக்கு 2015/2016 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 23.01.2017 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைதடியிலுள்ள சித்தமருத்துவப் பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து புதுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
30.12.2016 (சி/6920)



## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா 2016

இடம்:சந்நிதியான் ஆச்சிரமம்

**காலம்: 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி**

**ஆசியுரை**

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**திருவாசக பண்ணிசை:**

செல்விகள் தயாளரூபினி குமாரசாமி
தயாளநந்தினி குமாரசாமி
(பக்கவாத்திய சகிதம்)

**பட்டிமன்றம்:**

பொருள்: திருவாசகத்துள் கற்றோர் மனதை கவர்வதில் விஞ்சி நிற்பது தத்துவ அறிவே! பக்தி உணர்வே!

**நடுவர்**
*செந்தமிழ் சொல்லருவி*
**திரு ச.லலீசன்**
*(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)*

**தத்துவ அறிவே!**
திரு சி.ரமணராஜா
*(விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)*
சைவப்புலவர் கா.கமலநாதன்
*(விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசியக் கல்லூரி)*

**பக்தி உணர்வே!**
திரு இ.சர்வேஸ்வரா
*(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*
திரு.வே.சிவராஜா
*(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)*

கம்பர்மலை பெரிய தம்பிரான் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு, திருவாசகப் பேருரை முதலியன.

வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களது திருவுருவப்படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக ஆச்சிரம மண்டபத்திற்கு திருவாசக பாராயணத்துடன் எடுத்துவரப்படும்.

குறிப்பு:

கற்றல் உபகரணங்கள் வழங்கல்.

அமரர் தியாகராஜா மகேஸ்வரனது (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்) ஒன்பதாம் ஆண்டை நினைவுறுத்தும் வண்ணம் 140 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும்.

**நினைவுப் பேருரை:**
திரு.ஆ.சிவநாதன்
*(அதிபர், புற்றளை மகா.வித்தியாலயம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (சி/6918)

இவ்வண்ணம்
பேரவையினர்



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 65 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6697 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 9 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: QS/அரச தொழில்<br>தொ.இ: G/3437 |
| பிறப்பு: 1978 RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6700 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 57 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/3440 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 33<br>தகைமை/தொழில்:BBA/அரச தொழில<br>தொ.இ: B/5972 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/3462 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 42 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSc, Mphill/ பொறியியலாளர் லண்டன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5827 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 18<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G3474 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்'

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுவில் நேற்று அடையாள உணவு தவிர்ப்பு







வடக்கு கிழக்குப் பகுதிகளில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுத் தூபி முன்பாக அமர்ந்திருந்து அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த அடையாள உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை இடம் பெற்றது.

கடந்த கால யுத்தத்தின் போது காணாமற்போன மற்றும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு காணாமற்போன தமது உறவுகள் குறித்து அரசாங்கம் உரிய பதிலை அளிக்க வேண்டும் எனக் கோரியே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட உறவுகள் ஆட்கடத்தல்களையும் சித்திரவதைகளையும் நிறுத்து, இரகசியச் சித்திரவதை முகாம்களை அம்பலப்படுத்து, பயங்கரவாதத்தடை சட்டத்தை இரத்து செய், மனித உரிமைகளுக்கு மலர் வலயம் வைக்காதே ஆகிய சுலோக அட்டைகளை தம்முடன் தாங்கிப் பிடித்தவாறு ஏந்தியிருந்தனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பலரும் கலந்து கொண்டதுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் அரசாங்கம் சாதகமான பதில் தராத பட்சத்தில் ஜனவரி 20 ஆம் திகதி தொடக்கம் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் மற்றும் பிரஜைகள் குழு என்பவற்றின் ஏற்பாட்டில் குறித்த உணவு தவிர்ப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-15)

# வவு.மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கரில் உழுந்து செய்கை

## கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் தற்போது 18 ஆயிரம் ஏக்கரில் உழுந்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காணப்பட்ட போதும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாக விவசாயிகளால் 18 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்துப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த காலங்களை விட இம்முறை அதிகமாக உழுந்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மழை வீழ்ச்சி குறைவாக இருந்த போதும் பனியின் தாக்கத்தால் அச் செய்கை பெரியளவில் பாதிக்கப்படவில்லை.

இருப்பினும் தொடர்ந்து அதிக மழை பெய்யும் பட்சத்தில் உழுந்து செய்கை பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# மோ.சைக்கிள் மின்கம்பத்துடன் மோதுண்டு விமானப்படைவீரன் பலி

வவுனியா விமானப் படை தளத்தில் இடம்பெற்ற வருட இறுதி களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட விமானப் படை வீரர் ஒருவர் மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தனம் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா விமானப்படைத் தளத்தில் வருட இறுதி களியாட்ட நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதன்போது குறித்த நிகழ்வில் பங்குபற்றிய விமானப் படைத் தளத்தில் பணியாற்றும் அருனசாந்த (வயது - 31) என்ற விமானப்படை வீரர் நிகழ்வை முடித்துக் கொண்டு மதுபோதையில் படைத்தளப் பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளை செலுத்திய போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதில் குறித்த விமானப் படை வீரர் பலத்த காயமடைந்து மரணமடைந்தார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# மணல் அகழ்வு கடத்தல்கள் தொடருமாகில் ஒன்றிணைந்து போராட்டம் நடத்துவோம்

## விவசாய அமைப்புக்கள் எச்சரிக்கை




(மல்லாவி)

முல்லைத்தீவு வவுனிக் குளத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகள் மரக்கடத்தல்களை உடனடியாக தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த நிலை தொடருமாக இருந்தால் விவசாயிகள், விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு, வவுனிக் குளம் நீர்ப்பாசனத்திணைக் களத்தின் கீழ் உள்ள வவுனிக்குளம் மற்றும் வவுனிக் குளத்திற்கான நீரைசேர்க்கும் பாலியாற்றின் பகுதிகள் பல துண்டுகளாக கூறுபோடப்பட்டு தினமும் சட்டவிரோதமான முறையில் குளத்தின் நீரேந்து பிரதேசங்களில் கனரக வாகனங்கள் மூலம் மணல்அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் குளத்தினை அண்டிய இயற்கை வளங்கள் முழுமையாக அழிக்கப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் குளம் பெரும் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ள விவசாய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பாலியாறு மற்றும் குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள போதும் அதற்கான உரிய அனுமதிகள் திணைக்களத்திடமிருந்து பெறப்படாது மணல் யாட்களை நடத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு சட்டத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலியாற்றையும் குளத்தினையும் அண்டிய பகுதிகளில் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட மணல் யாட்கள் இயங்கி வருகின்றன.

எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு குளத்தினையும் குளத்திற்கு நீரைச் சேர்க்கும் பாலியாற்றின் இயற்கை சமநிலையைப் பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாய அமைப்புக்கள் விவசாயிகள் புதிய ஆண்டில் இதற்கான அனுமதியை நிறுதுமாறும் கோரியதுடன் இந்நிலைமை நீடிக்குமானால் மாவட்ட செயலகம் மற்றும் துறைசார் திணைக்களங்களை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.(2-15)

# அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்



தமிழ் அரசியல் கைதிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு மன்னார் பிரஜைகள் குழுவினர் பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு பாடசாலை உபகரணங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கி வைத்துள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா தனது மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட பாடசாலை உபகரணங்கள் இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவில் இடம் பெற்ற குறித்த நிகழ்வின் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை, மன்னார் பிரஜைகள் குழு உறுப்பினர் அந்தோனி சகாயம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள தவிசாளர் மாட்டீன் டயஸ் ஆகியோர் இணைந்து குறித்த உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

மன்னார், வவுனியா, கிளிநொச்சி,முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த 40 அரசியல் கைதிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு குறித்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# கந்தசுவாமி ஆலயத்தில் நாளை மழை வேண்டி விசேட அபிஷேகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியைப் போக்க அண்மைய நாட்களாக கோயில்களில் மழை வேண்டி யாகங்கள், பூசை வழிபாடுகள் என்பன நடைபெற்றன. எனினும் தற்போது பரவலாக காற்றுடன் கூடியதான சிறிதளவான மழை பெய்துள்ளது.

இம்மழை நெற் பயிருக்கு போதுமானதாக இன்மையால் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்நிலையில் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணிக்கு மழை வேண்டி விசேட அபிஷேகம் நடைபெறவுள்ளது.

அனைத்து அடியார்கள், விவசாய அமைப்பினர், அனைத்து விவசாயிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-254)

# ஒருநாள் வட்டார மாநாடு

எப்போதும் யெகோவா மீது அன்பு காட்டுங்கள் என்ற தொனிப்பொருளையுடைய ஒருநாள் வட்டார மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணிக்கு இசையுடன் ஆரம்பமாகவுள்ளது.

காலை 11.05 மணிக்கு கடவுள் மேல் அன்பு காட்டுகிறவன் தன் சகோதரன் மேலும் அன்பு காட்ட வேண்டும் என்ற ஆன்மீக விசேஷ பேச்சும் வேறு பல பேச்சுக்களும் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## நீதிமன்ற அபராதங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 14 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த இருவரையும் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் 14 நாட்கள் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கலப்படம் செய்த பெற்றோல் விற்பனை செய்த வர்த்தகருக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கலப்படம் செய்யப்பட்ட பெற்றோல் விற்பனை செய்த ஒருவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை விற்பனை செய்த பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை பொலிஸாருக்கு விற்பனை செய்த பொலிஸார் குறித்த பெண்ணை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.(2-15)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் செஞ்சோலை சிறுவர் இல்லத்தை சேர்ந்த 23 சிறார்களுக்கு காலணிகள் பற்றாக்குறையாக உள்ளதாக செஞ்சோலை நிர்வாகம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இக் காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன கற்றல் உபகரணங்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க கனடா கிளையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:-மல்லாவி செய்தியாளர்)

## 'நஞ்சற்ற உணவு நஞ்சற்ற நாடு' அலுவலகத் தோட்ட வயல் விழா





(மல்லாவி)

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட மாந்தை கமநல சேவை நிலையத்தின்கீழ் "நஞ்சற்ற உணவு-நஞ்சற்ற நாடு" எனும் கருப்பொருளில் விவசாய விரிவாக்கல் நிலையம் மற்றும் மாந்தை கமநல அபிவிருத்தி நிலையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த அலுவலகத் தோட்ட வயல் விழா மன்னார் மாந்தை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாந்தை கமநல சேவை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த அலுவலகத் தோட்டத்தை வருகை தந்திருந்த விருந்தினர்கள், மக்கள் ஆகியோர் பார்வையிடப்பட்டனர்.

குறித்த வயல் விழாவிற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன், மற்றும் விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மன்னார் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஏ.சிறிரங்கன் உட்பட கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.(2-15)

## மூன்றுமுறிப்பில் பிக்கப் வாகனமும் தனியார் பேருந்தும் மோதுண்டு விபத்து



வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில், ஏ- 9, வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த மகேந்திர பிக்கப் வாகனம் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பயணிகள் பேருந்தும் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது என வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஏ - 9 வீதியில் வவுனியா நகரப் பகுதிக்கும் மூன்று முறிப்பு பகுதியில் உள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துச் சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்களோ, உயிரிழப்புக்களோ இடம் பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.பிக்கப் வாகனம் மட்டும் பகுதிச் சேதமடைந்துள்ளது. விபத்து குறித்து வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)




## மன்னார் ஔவையார் கலையரங்கில் நடைபெற்ற கலை இலக்கிய பெருவிழா





(மல்லாவி)

மன்னார் பிரதேச செயலகத்தின் "கலை இலக்கிய பெருவிழா" நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் நாவலர் மண்டபத்தில் உள்ள, ஔவையார் கலையரங்கில் மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். வை.எஸ். தேசப்பிரிய கலந்து சிறப்பித்துள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் ப. பபாகரன், மன் /சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி முதல்வர் த. தனேஸ்வரன், மன்னார் நகர சபையின் செயலாளர், எக்ஸ். எல். றெனால்டோ, வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது,மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலை இலக்கிய பேரவையால் "மன்னல்" எனும் நூல் வெளியீடு இடம் பெற்றது.அத்துடன் கலை இலக்கிய பேரவையால் பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள் ஆகியோர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இறுதியாக கலை நிகழ்வுகளும் நடைபெற்றதுடன் நிகழ்வுக்கு கலை ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (2-15)

## ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய கட்டுமானத்திற்கு நிதியொதுக்கீட்டிலிருந்து சீமெந்து பக்கற்றுகள்



(மல்லாவி)

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆண்டான்குளம் பராங்கி சாலம்பன் ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தின் நிர்வாகத்தினர் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் குறித்த கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் தமது ஆலயக்கட்டுமானப்பணிக்கு சீமெந்து கொள்வனவுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைய ஆலயத்தின் கட்டுமானத்திற்கு சீமெந்து கொள்வனவு செய்து தருவதாக அமைச்சர் வாக்குறுதி வழங்கியிருந்தார். அந்த வகையில் தனது 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை (CBG) நிதியில் இருந்து 27 ஆயிரத்து 810 ரூபாய் நிதியை ஒதுக்கி 30 சீமெந்து பக்கற்றுக்களை கொள்வனவு செய்வதற்கான காசோலையை கடந்த 27 ஆம் திகதி செவ்வாய் முற்பகல் 11.30 மணியளவில் ஆலய நிர்வாக சபையின் அங்கத்தவரிடம் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். (2-15)

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2017 முதல் 31.12.2017



### அருகில் இருப்பவர்களும் ஆனந்தமாக வாழ விரும்பும் ரிஷப இராசி அன்பர்களே!

உங்களிடம் ஒரு செயலை ஒப்படைத்து விட்டால், எப்பாடுபட்டாவது அதைச்செய்து முடித்து விடுவீர்கள். எப்படி முடித்தோம் என்ற இரகசியத்தை யாரிடமும் சொல்ல மாட்டீர்கள். நீங்கள் மற்றவர்களை உற்சாகமூட்டிக் கடமைகளைச் செய்ய வைப்பீர்கள். அனைத்துச் சுகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று சொல்வீர்கள். உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால், அனைத்துக் கலைகளையும் அறிந்து கொள்வதில் ஆர்வம் கொள்வீர்கள். கட்டடங்களையும், சுற்றுப்புறங்களையும் தாய்மையாக வைத்துக் கொள்ள விரும்புவீர்கள். உங்கள் பேச்சில் நகைச்சுவையும் கலந்திருக்கும் பகைச் சுவையும் கலந்திருக்கும்.

உள்ளதை உள்ளபடி சொல்வதால் தான் நீங்கள் எல்லோர் உள்ளத்திலும் இடம்பெறுகிறீர்கள். உங்கள் பேச்சு ஆளை மட்டுமல்ல, அகிலத்தையே மயக்கும் ஆற்றல் பெற்றது. உரக்கப் பேசினாலும், இரக்க குணத்தையும் பெற்றிருப்பீர்கள். பரக்கப்பரக்கக் காரியங்களைச்

## முத்தான பலன் தரும் பத்தாமிடத்து கேது!

செய்யாமல் பக்குவமாகக் காரியங்களைச் செய்வதில் கைதேர்ந்தவர் நீங்கள். வருமானம் வருவது பற்றியும், வருங்கால முன்னேற்றம் பற்றியும் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டே இருப்பீர்கள்.

இறைவனைச் சுமக்கும் நந்தி, உங்கள் இராசியின் சின்னம். எனவே மற்றவர்களது மனப்பாரங்களைச் சுமப்பவர்களாக விளங்குவீர்கள். பிறர் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்ய வழி வகுப்பீர்கள். சந்திரன் உச்சம் பெறும் இராசி உங்கள் ராசி எனவே மதிவளம் மிக்கவர்களாக இருப்பீர்கள்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு, திருவோணத்தில் பிறக்கும் புத்தாண்டு எப்படிப்பட்ட திருப்பங்களைத் தரப்போகிறது என்று பார்க்கலாம். உங்கள் சுய ஜாதகத்தை புரட்டிப் பாருங்கள். அதை, புத்தாண்டு ஜாதகக் கட்டத்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள். வலிமை மிகுந்த கிரகத்திற்குரிய தெய்வத்தை வழிபட்டால் வளர்ச்சி காணலாம்.

**புத்தாண்டின் தொடக்கம்**

பிறக்கும் புத்தாண்டு உங்களுக்குப் பெருமைகளைச் சேர்க்கும் ஆண்டு என்றே சொல்லலாம். உரிமையுடன் பழகும் நண்பர்களின் ஒத்துழைப்போடு, ஒப்பற்ற பல நல்ல காரியங்களை இந்த ஆண்டில் செய்து முடிக்கப் போகிறீர்கள். குரு பார்வையோடு பிறக்கும் இந்தப் புத்தாண்டு, குழப்பங்களை அகற்றி குதூகலத்தை வழங்கும். இழப்புகளை ஈடு செய்ய வழிபிறக்கும். ஏற்றத் தாழ்வு நிலை மாறும்.

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகு இருக் கிறார். 5 ஆம் இடத்தில் குரு இருக்கிறார். 7ஆம் இடத்தில் சனியும், 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். உங்கள் இராசிநாதன் சுக்ரன், சப்தம விரயாதிபதியான செவ்வாயோடு இணைந்திருக்கிறார். சூரியன் 8 ஆம் இடத்தில் வீற்றிருக்கிறார்.

இத்தகைய கிரகங்களின் அமைப்பில் திருவோண நட்சத்திரத்தில் புத்தாண்டு பிறக்கிறது. இனி திருமண முயற்சி முதல் தெய்வீக காரியங்கள் வரை ஒவ்வொன்றாக நடைபெற்று உள்ளத்தை மகிழ்விக்கும். ஆண்டின் தொடக்கத்தில் குரு உங்கள் இராசியையும் 9,11 ஆகிய இடங்களையும் பார்ப்பதால் இதுவரை உடலில் தொற்றிக் கொண்டிருந்த நோய்கள் ஓடி ஒளியப் போகின்றன. கடன்சுமை வெகுவாகக் குறையும். கல்வித் தடை அகலும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

இந்த ஆண்டு பலம் வாய்ந்த கிரகங்களான ராகு-கேதுக்கள், குரு மற்றும் சனிப் பெயர்ச்சி வர உள்ளது. அதன் மூலம் உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரப் போகின்றன.

**வெற்றிதரும் ராகு-கேது பெயர்ச்சி**

27.07.2017 அன்று பின்னோக்கி நகரும் கிரகங்களான, ராகு-கேதுக்கள் பெயர்ச்சியாகின்றன. அதனால் பல மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரப் போகின்றன. 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இனி 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது, 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து உன்னத வாழ்வை அமைத்துக் கொடுக்கப் போகிறார்.

3 ஆம் இடத்து ராகு எத்தனை தடைகள் இருந்தாலும் அவற்றை எடுத்தெறிந்து எளிதாக்கி விடும். அதே நேரத்தில் ஜாதகத்தில் நாகதோஷம் இருப்பவர்கள், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்துகொண்டால் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொள்ள இயலும். ராகுவால் உடன்பிறப்புகளின் எண்ணங்கள் மாறும். வழக்குகள் சாதகமாக முடியும். பொதுநலத்திலும் சரி, அரசியலிலும் சரி முழுமையாக ஈடுபட்டிருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வந்து சேரும். தொழில் வளர்ச்சி உண்டு.

ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் கேது, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அமைத்துக் கொடுக்கும். உத்தியோக முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பரிசீலனை செய்யப்படும். இதுவரை உங்கள் திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்காத மேலதிகாரிகள், இப்பொழுது உங்களை மதிப்பார்கள். புதிய பொறுப்புகள் வந்து சேரும். பூமியோகம் உண்டு. பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகள் முன்னேற்றத்திற்கு வித்திடும். உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் மறையும்.

**ஆறாமிடத்திற்கு வரும் குரு பகவான்**

02.09.2017 இல் குருபகவான் துலாம் இராசிக்கு பெயர்ச்சியாகப் போகிறார். இது வரை 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு, ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 6 இல் குரு, ஊரில் பகை என்பார்கள். ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்த வரை அஷ்டமாதிபதியாகவும், இலாபாதிபதியாகவும் விளங்கும் குரு 6 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

குருவின் பார்வை 2,10,12 ஆகிய இடங்களில் பதிவதால், குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வருங்காலத்தை வளமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். துணிச்சல் அதிகரிக்கும். தொடர் வெற்றி ஏற்படும். பயணங்களால் பலன் உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்துசேரும். கண்ணியம் மிக்கவர்கள் உங்கள் கடமைக்கு உறுதுணையாக இருப்பர். புண்ணிய தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலையும் அமையும்.




**சனிப் பெயர்ச்சிக் காலம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி 16.12.2017 இல் அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கிறார். அஷ்டமத்துச்சனி அலைச்சலையும், அதிக விரயத்தையும் ஏற்படுத்தும். வீண் செலவுகளைக் கொடுத்து திண்டாடவைக்கும். ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் சுக்ரனுக்கு, சனி நட்பு கிரகம் என்பதால், பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாது. அலைச்சலை ஏற்படுத்தினாலும் ஆதாயத்தைக் கொடுக்கும். எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதும், வருவாய் அறிந்து செலவழிப்பதும் நல்லது. ஒரு சிலருக்கு வீடு மாற்றம், இடமாற்றம், நாடு மாற்றம் ஏற்படலாம். சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

தஞ்சாவூர் மாவட்டம் திருக்கடையூர் சென்று, அற்புதப்பலன் தரும் அபிராமி அம்மனையும், ஆற்றலை வழங்கும் அமிர்தகடேஸ்வரரையும் அனுகூலம் தரும் நாளில் வழிபட்டு வாருங்கள். வெள்ளிக்கிழமை விரதமிருந்து அம்பிகையை வழிபட்டால், துயரங்கள் துள்ளி ஓடும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 18.4.2017 வரை), ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். இனம் புரியாத கவலை ஆட்கொள்ளும்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை), உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகலாம்.

குரு வக்ர காலம் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) உங்களுக்கு நன்மையை வழங்கும். அஷ்டம இலாபாதிபதியான குரு, இழப்புகளை ஏற்படுத்தினாலும், அதை ஈடுசெய்ய வழிவகுத்துக் கொடுப்பார். பிள்ளைகளை கண்காணிப்பில் வையுங்கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

சனி வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 06.08.2017 வரை) தொழில் மாற்றசிந்தனை ஏற்படும். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரக் கூட்டாளிகளை விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. மற்றவர்களை விமர்சிப்பதன் மூலம் பிரச்சினை உருவாகலாம். உங்கள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களிடம் மட்டும் உங்கள தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

புத்தாண்டு தொடக்கம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை, வளர்ச்சியின் உச்சத்திற்குச் செல்லநேரிடும். வாரிசுகளும், வாழ்க்கைத் துணையும் உங்கள் ஆலோசனைகளை கேட்டு நடக்க முன்வருவர். பிறருக்கு வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். வருமானம் உயரும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். செப்டெம்பர் மாதத்திற்கு மேல் உங்கள் செலவுகள் கூடலாம். ஒரு சிலருக்கு ஊர் மாற்றமும், வீடு மாற்றமும் வந்து சேரலாம். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தனித்து இயங்கும் முயற்சியை கைவிடுவது நல்லது. பௌர்ணமியில் மலை வலம் வருவது மகத்துவம் தரும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்தைக் கூட்டும்.

(தொடரும்)

# அரசுக்கு எதிராக லண்டனில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்





அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு எதிராக லண்டனில் வசிக்கும் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.


இலங்கை தேசிய கொடியை ஏந்தியவாறு சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலான பதாகைகளை ஏந்திய வண்ணம் இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


தமிழ் தேசிய கூட்டமைப்பு, அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம், ஐரோப்பா மற்றும் கனடா ஆகியவற்றின் விருப்பத்துக்கமைய பெடரல் அரசியலமைப்பொன்றை அரசாங்கம் கொண்டு வரப்போவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, இலங்கை அரசு முப்படையினரை நடத்தும் விதம் மற்றும் இந்தியாவுடனான உத்தேச வர்த்தக உடன்படிக்கை என பனவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

"அரசியலமைப்பில்கைவைக்காதே", "இலங்கையில் தமிழ் ஈழத்தை நிறுத்து" போன்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது உலகின் உயரமான பாலம்





உலகின்உயரமானபாலம் தென் சீனாவில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த பாலம் நேற்று முன்தினம் பொதுமக்களின் பார்வைக்காக விடப்பட்டுள்ளது.

பாரிய பள்ளத்தாக்கின் மேல் 570 மீற்றர் உயரத்தில் குறித்த பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாலத்தின் உயரமானது கிட்டத்தட்ட 200 மாடிக்கட்டடங்களின் உயரத்திற்கு சமமானதாகும்.

இப்பாலத்திற்கு பெய்பான் ஜியாங் எனப்பெயரிடப்பட்டுள்ளது. சீனாவின் தென் மேற்கு மாகாணங்களான யுனான் மற்றும் குளோகு ஆகிய மாகாணங்களை இணைக்கும் வகையில் குறித்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

பெய்பான்ஜியாங் பாலத்தின் நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாலத்திற்கு 1341 மீற்றர் நீளமான இணைப்பு கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இதற்கென சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும்பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு தனது மாகாணசபையின் நிதியொதுக்கீட்டிலிருந்து 20 துவிச்சக்கர வண்டிகளை வடமாகாண சபை உறுப்பினர்பா.கஜதீபன் நேற்று வழங்கி வைத்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணியளவில் யாழ்.வலயக்கல்விப் பணி மனையில் வலயக் கல்விப்பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. வடமாகாணசபை உறுப்பினருடன் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா, திட்டமிடல் பணிப்பாளர் ரவிச்சந்திரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பயனாளிகள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# கல்வி அமைச்சர் பதவி வேண்டும் பந்துல குணவர்த்தன கோரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் கல்வியமைச்சர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரியுள்ளதாகவும், இதை அவரே தன்னிடம் கூறியதாகவும் ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இந்திக கோரளகே தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தோலவியடைந்த பின்னரும், ஹோமாகம தொகுதியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னரும் தன்னுடன் நடந்த சந்திப்பில் அவர் இதனை கூறியதாகவும் இந்திக கோரளகே தெரிவித்தார். (இ-3)

# ஜனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்; இளைஞன் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் சந்தேக நபரான இளைஞனை விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல நேற்று உத்தர விட்டார்.

சந்தேக நபர் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதால், பிணை வழங்குதை எதிர்ப்பதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எனினும் சம்பவம் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணைகள் முடிவடைந்துள்ளதால், சந்தேக நபருக்கு பிணை வழங்குமாறு சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து சந்தேக நபருக்கு பிணை வழங்கிய நீதவான், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (இ-3)

# முன்னாள் பிரதமருக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி







(கொழும்பு)

மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று காலை அவரது இல்லத்திற்கு சென்றார்.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் உடல் ஹொரணையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சுகயீனம் காரணமாக தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள்பிரதமர் கடந்த 27ஆம் திகதி காலமானார்.

அவரது இறுதிக் கிரியைகள் இன்று அரச மரியாதையுடன் இடம்பெறவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,புதிய தலைமுறை அரசியல்வாதிகளுக்கு முன்னாள் பிரதமர் ஒரு உதாரணம் எனத் தெரிவித்துள்ளார.

மேலும்,முன்னாள் பிரதமரின் பூதவுடலுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இறுதி அஞ்சலி செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# ஜெயலலிதாவின் மரணத்தில் எனக்கும் சந்தேகம் உள்ளது



## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வைத்தியநாதன் தெரிவிப்பு

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தொடரப்பட்ட வழக்கில், "அவரது மரணத்தில் எனக்கும் தனிப்பட்ட முறையில் சந்தேகம் உள்ளது" என உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.வைத்தியநாதன் கருத்து தெரிவித்துள்ளார். மேலும் இந்த வழக்கு தொடர்பாக பிரதமரின் அலுவலகம் சார்பில் மத்திய அரசு சட்டத்தரணி, தமிழக அரசு சார்பில் தமிழக அரசு தலைமை சட்டத்தரணி நோட்டீஸ் பெற்றுக்கொண்டனர்.

சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த பி.ஏ.ஜோசப் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது.

நான் அ.தி.மு.க. தொண்டன். தற்போதும் அடிப்படை உறுப்பினர். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்திலபல சந்தேகங்கள்உள்ளன. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த 4 மாதங்களில் உடல் நலம் பாதிக்கப்பட்டு அப்பலோவில் அனுமதிக்கப்பட்டார்.

ஜெயலலிதா உடல்நலம் முன்னேற்றமடைந்து வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிக்கை மூலம் கூறி வந்தது. எல்லா தகவல்களும் ஜெயலலிதா நன்றாக உள்ளார். விரைவில் வீடு திரும்புவார் என்றே கூறி வந்தன. இதை உறுதி செய்யும் விதமாக வைத்தியசாலை தலைவர் பிரதாப் சி.ரெட்டியும் ஜெயலலிதாவின் உறுப்புகள் சரியாக செயறபடுகின்றன. இதனால் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து சாதாரண வோட்டுக்கு மாற்றப்படுவதாக கூறினார்.

டிசெம்பர் 4ஆம் திகதி ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக எய்ம்ஸ் வைத்தியாகள், அவர் நன்றாக இருப்பதாக பேட்டி அளித்தனர். டிசெம்பர் 5ஆம் திகதி மாலை "ஜெயலலிதா இறந்து விட்டதாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானது" என அப்பலோ வைத்தியசாலை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது. ஆனால் அன்றிரவு 11.30 மணிக்கு அவர் இறந்து விட்டார் என மற்றொரு அறிக்கையை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் என்னைப் போன்ற சாதாரண மக்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக ஜெயலலிதா இறந்து விட்டார் என்று அறிவிப்பதற்கு சில மணி நேரத்துக்கு முன்பாக ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பதவியேற்கிறார். ஜெயலலிதாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது, "அவருடைய கால்கள் அகற்றப்பட்டுள்ளன, அவரது உடல் பதப்படுத்தப்பட்டுள்ளது" எனக் கூறப்பட்டது.

டிசெம்பர் 5ஆம் திகதி இரவு இறந்த அவரது உடல் மறுநாளே அடக்கம் செய்யப்பட்டபோது எதற்காக பதப்படுத்த வேண்டும்? எதற்காக இறப்பதை அறிவிக்கும் முன்பாக முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்கள் பதவியேற்க வேண்டும்? அரவக்குறிச்சி உள்ளிட்ட 3 தொகுதி தேர்தலுக்கு கைரேகை பெறும்போது அவர் சுயநினைவோடுதான் இருந்தாரா? என அவரது மரணத்தில் அடுக்கடுக்கான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஏற்கனவே, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மரணம் குறித்த வழக்கில் ஒரு நபர் விசாரணை கமிஷன் அமைத்து கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதுபோல மிகப்பெரிய மக்கள் தலைவரான ஜெயலலிதாவின் மரணத்திலும் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனவே இது தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வுபெற்ற 3 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும். அவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டும். அதுபோல மெரினாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஜெயலலிதாவின் உடலைப் பத்திரமாக பாதுகாக்க உத்தரவிட வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், அந்த ஆதாரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும்.

மரணம் குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய தமிழக அரசு மற்றும் வைத்திய சாலை நிர்வாகத்துக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் விடுமுறை கால நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், வி.பார்த்தியன் ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் நடந்தது.

மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எம். விஜயன் ஆஜராகி, "முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் பல சந்தேகங்கள் உள்ளன. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணை கமிஷன் அமைத்து விசாரித்தால் மட்டுமே பல உண்மைகள் வெளியே வரும். அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையிலும் பல முரண்பாடுகள் உள்ளன" என்றார்.



அப்போது அரசு தரப்பில் ஆஜரான தலைமை சட்டத்தரணி ஆர்.முத்துக்குமாரசுவாமி, "முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் எந்த மர்மமும் இல்லை. சரியான சிகிச்சைதான் அளிக்கப்பட்டது. திடீரென ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாகத்தான் அவர் இறக்க நேரிட்டது. இதே காரணத்துக்காக டிராஃபிக் ராமசாமி மற்றும் பிரவீணா ஆகியோர் தொடர்ந்த வழக்குகளை தலைமை நீதிபதி அடங்கிய முதல் அமர்வு தள்ளுபடி செய்துவிட்டது. எனவே இந்த மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும்" என்றார்.

மத்திய அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜெ.மதனகோபாலராவ், "தேவைப்பட்டால் இந்த மனு தொடர்பாக மத்திய அரசிடம் விளக்கம் பெற்று பதிலளிக்க தயாராக உள்ளேன். மத்திய அரசுக்கு அனைத்து விபரங்களும் தெரியும்" என்றார்.

அப்போது நீதிபதி எஸ். வைத்தியநாதன், "மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள சந்தேகங்களைப் போக்க மாநில அரசு முற்றிலுமாக தவறிவிட்டது. மத்திய அரசும் அவ்வப்போது எய்ம்ஸ் வைத்தியர்கள், மத்திய அமைச்சர்கள் ஏன் ஆளுநரைக்கூட தனது பிரதிநிதிகளாக வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்து ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்து அறிந்து கொண்டது. ஆனால் ஒரு மாநில முதல்வருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மத்திய அரசும் மக்களுக்கு எந்தவித தகவலையும் தெரிவிக்காதது கண்டனத்துக்குரியது. இதுவரை அமைதி காத்துவிட்டு இப்போது பதிலளிக்க மத்திய அரசு முன் வருகிறது. ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்த தகவல்களைத் தெரிவிக்காததில் இருந்தே பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளதோ? என்ற ஐயம் எழுந்துள்ளது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். உடல்நலக்குறைவு ஏற்பட்டபோது அவரது வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டன.

மனுதாரர் அ.தி.மு.க. உறுப்பினர். அவர் தனது கட்சித் தலைவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகக் கூறி இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார். பொதுவாக மரணத்தில் சந்தேகம் எழுவது இயல்பான ஒன்றுதான் என்றாலும் அதைப் போக்க வேண்டிய கடமை மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது. ஒரு நீதிபதி என்பதைத் தாண்டி சாதாரண குடிமகன் என்ற அடிப்படையில் எனக்கும் ஜெயலலிதாவின் மரணத்தில் சந்தேகம் உள்ளது. இரத்த உறவினரான அவரது அண்ணன் மகள் தீபா இதுவரை நீதிமன்றத்தை அணுகாதது ஏன் எனத் தெரியவில்லை. அவரது உடலைத் தோண்டியெடுத்தால் தான் உண்மைகள் வெளியே வருமா? அப்படியென்றால் உண்மைகள் வெளியே வர அவரது உடலைத் தோண்டியெடுத்து பரிசோதிக்க ஏன் உத்தரவிடக்கூடாது? இது பொதுநல வழக்கு என்பதால் தலைமை நீதிபதி முன்பாகத் தான் விசாரணைக்கு வரும். ஒருவேளை இந்த வழக்கு வழக்கமான முறையில் என்னிடம் விசாரணைக்கு வந்திருந்தால் ஜெயலலிதாவின் உடலைத் தோண்டியெடுத்து பரிசோதிக்க உத்தரவிட்டிருப்பேன்.

மேலும் மனுதாரர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மர்ம மரணம் குறித்து அறிய கொல்கத்தா உயர் நீதிமன்றம் விசாரணை கமிஷன் அமைத்தது போல, ஜெயலலிதாவின் மரணத்தை அறிய 3 நீதிபதிகள் கொண்ட விசாரணை கமிஷன் அமைக்க கோரியுள்ளார். இந்த மனுவை நிராகரிக்க முடியாது" என கருத்து தெரிவித்தார்.

அதன்பிறகு இந்த வழக்கு தொடர்பாக பிரதமர் அலுவலகம், சிபிஐ, மத்திய உள்துறை அமைச்சகம், நாடாளுமன்ற விவகாரத்துறை, மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை சார்பில் மத்திய அரசு சட்டத்தரணியும், தமிழக தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், சட்டத்துறை செயலாளர், தமிழக சட்டசபை செயலாளர், தமிழக டி.ஜி.பி., சென்னை பொலிஸ் ஆணையர் ஆகியோர் சார்பில் தமிழக தலைமை அரசு சட்டத்தரணி நோட்டீஸ் பெற்றுக்கொண்டனர். அப்பலோ வைத்தியசாலை தலைவருக்கு மனுதாரர் சார்பில் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை வரும் ஜனவரி 9ஆம் திகதக்கு ஒத்தி வைத்தனர். (இ-7)

# 'ஜெ' மரணத்தில் சந்தேகம் இருப்பதாக நீதிபதிகள் கூறியது வரவேற்கத்தக்கது



## விஜயகாந்த் தெரிவிப்பு

ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் இருப்பதாக நீதிபதிகள் கூறியது வரவேற்கத்தக்கது என்று விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக அ.தி.மு.கவைச் சேர்ந்த ஜோசப் என்பவர் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் வைத்தியநாதன், பார்த்திபன் ஆகியோர் ஜெயலலிதா மரணத்தில் சந்தேகங்கள் இருப்பதாகக்கூறி அப்பலோ வைத்தியசாலைக்கும், மத்திய-மாநில அரசுகளுக்கும் பிரதமர் அலுவலகத்துக்கும் பதில் அளிக்க உத்தரவு பிறப்பித்து பல்வேறு சந்தேகங்களை எழுப்பியது வரவேற்கத்தக்கது.

எனவே வைத்தியசாலையில் உள்ள வீடியோ பதிவுகளை உயர்நீதிமன்றத்துக்கு கொடுத்து அங்கு நடந்த சம்பவங்கள் அனைத்தையும் பொதுமக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)



# ரஷ்ய அதிகாரிகள் 35 பேரும் 72 மணித்தியாலங்களுக்குள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும்

## ஜனாதிபதி ஒபாமா உத்தரவு

***(வோஷிங்டன்)***

***ரஷ்ய நாட்டைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் 35 பேரை நீக்கம் செய்தேதோடு 72 மணித்தியாலயத்திற்குள் அமெரிக்காவை விட்டு வெளியேறுமாறு ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். இந்த நடவடிக்கை சர்வதேச ரீதியாக பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.***

அமெரிக்காவில் கடந்த 8 ஆம் திகதி நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் 'பாப்புலர் வாக்கு' என்று அழைக்கப்படுகிற மக்கள் வாக்குகளை பெருவாரியாக பெற்றாலும், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் 'எலெக்டோரல் வாக்கு' என்னும் தேர்தல்சபை வாக்குகளை அதிகம் பெற்றதால், வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இந்த தேர்தலில் குடியரசு கட்சியை சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்கு ஆதரவாக ரஷ்யா செயற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்த தேர்தல் முறையில் ரஷ்யாவை சேர்ந்த ஹேக்கர்கள் (சட்டவிரோதமாக மோசடி செய்து நுழைகிறவர்கள்) நுழைந்து மோசடி செய்து விட்டதாக கிரீன் கட்சி வேட்பாளர் ஜில் ஸ்டீன் குற்றம் சாட்டியிருந்தார்.

தற்போது அமெரிக்காவின் உளவு இரகசியங்களை வெளியிட்ட எட்வர்டு ஸ்னோடன், இதே குற்றச்சாட்டை கூறி இருந்தார்.

டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறும் வகையில் மின்னணு வாக்கு இயந்திரத்தில் கூஷிபேர் 2.0 என்ற மால்வேர் பயன்படுத்தப்பட்டதாகவும், இதற்கான ஆதாரம் தங்களிடமுள்ளதாகவும் ஸ்னோடன் தெரிவித்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டில் வோஷிங்டனில் உள்ள ரஷ்ய தூதரகத்தில், இருந்து அந்நாட்டு அதிகாரிகள் 35 பேரை அமெரிக்கா அதிரடியாக நீக்கம் செய்துள்ளது.

மேலும் தூதரக அதிகாரிகள் 35 பேரை அவர்களுடன் குடும்பத்துடன் அமெரிக்காவை விட்டு வெளியேற 72 மணி நேரம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இராணுவம் - கிளர்ச்சியாளர்கள் மீண்டும் போர் நிறுத்த உடன்பாடு

சிரிய இராணுவம் - கிளர்ச்சியாளர்கள் இடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இது நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்தது.

சிரியாவில் ஆசாத் தலைமையிலான அரசு நடைபெற்று வருகிறது. ஆசாத் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று முக்கிய எதிர்க்கட்சியான தேசியக் கூட்டணி போர்க் கொடி தூக்கி வந்தது. மேலும், எதிர்க்கட்சிகளின் ஒரு அமைப்பு ஆயுதம் ஏந்தி போராடத் தொடங்கியது. கடந்த 2011 இல் இருந்து சிரியாவில் போர் நடைபெற்று வருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஐ.எஸ். தீவிரவாதிகளும் சிரியாவில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால்அமெரிக்க இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிராக சிரியாவில் தாக்குதல் நடத்தியது. கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து ஜனாதிபதி ஆசாத்திற்கு ஆதரவாக ரஷ்யா போரில் குதித்தது. இதனால் சிரியாவில் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது.

2011 இல் இருந்து நடைபெற்று வரும் போரின் காரணமாக சுமார் 3 இலட்சம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெ ரிககா மற்றும் ரஷ்யா இணை ந்து கடந்த செப்டெம்பர் மாதம் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய்தது.

அதன்படி போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை தேசிய அளவில் இந்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்பின் ஆங்காங்கே வன்முறை வெடிக்க போர் ஒப்பந்த உடன்பாடு மீறப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன் ரஷ்யா உதவியுடன் சிரியா இராணுவம் கடும் போருக்குப்பின் அலெப்போ நகரைமீட்டது. இந்நிலையில் சிரியா இராணுவம் - தேசிய கூட்டணியின் ஆயுதம் ஏந்திய அமைப்புடனும் ரஷ்ய போர் நிறுத்த உடன்பாட்டுக்கு பேச்சுவார்த்தை நடத்தியது. இதை இரண்டு தரப்பும் ஒப்புக கொண்டன. இதை ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்தார்.

இதை இரண்டு பிரிவுகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இதனால் நேற்று நள்ளிரவு முதல் சிரியா முழுவதும் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. (இ-7)

## சீனா - நேபாளம் இடையே கூட்டு இராணுவப் பயிற்சி

2017 ஆம் ஆண்டு தொடக்கதில் சீனா மற்றும் நேபா ளம் நாடுகளை சேர்ந்த இரா ணுவ வீரர்கள் இணைந்து கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

ஆசிய கண்டத்தின் முக்கியமான இரண்டு நாட்டுகளாக சீனாவும் நேபாளமும் இருந்து வருகிறது. இந் நிலையில், சீனா மற்றும் நேபாளம் நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்கள் 2017 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இணைந்து கூட்டுப்பயிற்சியை மேற்கொள்ள உள்ளனர். இது தொடர்பாக சீன பாதுகாப்பு துறை செய்தி தொடர்பாளர் யங்க் யுஜூன் கூறுகையில்,



சீனா மற்றும் நேபாளம் தங்களது போர் பயிற்சி தொடங்குவது குறித்து பேசியுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

தகவலின் படி, அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்த இராணுவ பயிற்சி நடை பெறும் என்றும் நேபாள இராணுவ வீரர்கள் சர்வதேச குழுக்களில் செயற்படுவது தொடர்பாக பயிற்சி அளிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

நேபாளமானது இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்கனவே இராணுவ பயிற்சியை மேற்கொண்டு வந்துள்ளது. தற்போது முதல் முறை யாக சீனாவுடன் பயிற்சியை மேற்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொடூரக் கணவனைக் கொன்ற பெண்ணுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய பிரான்ஸ் ஜனாதிபதி

கொடூரத்தனமான கணவனை கொன்றதற்காக பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பெண்ணை விடுதலை செய்யும்படி பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜாக்குலின் சாவேஜ் என்ற பெண், பல ஆண்டுகளாக தன்னை அடித்தும் உதைத்தும் கொடூரத்தனமாக சித்ரவதை செய்துவந்த கணவனை கொன்று விட்டார்.

இதுதொடர்பாக நடை பெற்ற வழக்கில் அந்தப் பெண்ணுக்கு கடந்த 2012 ஆம ஆண்டில் பத்தாண்டு சிறை தண்டனை



விதிக்கப்பட்டது. இதையடுத்து, சிறையில் அடைக்கப்பட்ட தங்களின் தாயாருக்கு பொது மன்னிப்பு வழங்கி, விடுதலை அளிக்க வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோயிஸ் ஹாலண்டேவுக்கு ஜாக்குலின சாவேஜின் மகள்கள் கருணை மனு அனுப்பி இருந்தனர்.

இதே கோரிக்கையுடன் இணையத்தளம் மூலம் பிரசார இயக்கமும் நடத்தப்பட்டது. இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து சுமார் 4 இலட்சம் மக்கள் கையொப்பமிட்டிருந்தனர்.

இதனையடுத்து, நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டான சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி, ஜாக்குலின் சாவேஜ்க்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே அறிவித்தார். இதையடுத்து, நேற்று முன்தினம் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். (இ-7)

## ஆப்கானிஸ்தானில் சீக்கிய மதத்தலைவர் சுட்டுப்படுகொலை

ஆப்கானிஸ்தான் நாட்டின் குண்டூஸ் நகரில் சீக்கிய மதத் தலைவரை நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் சுட்டுப்படுகொலை செய்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள குண்டூஸ் நகரில் சீக்கிய இனத்தை சேர்ந்த சிலர் சொந்தமாக தொழில் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கான அமைப்புக்கு இங்கு தலைமையேற்று தேவையான உதவிகளை செய்து வந்தவர், லாலா டேல் சோஸ்.

குண்டூஸ் நகரில் உள்ள ஹாஜி குலிஸ்தான் கோச்சி ஹமான் பகுதியில் கடை வைத்திருக்கும் இவர், நேற்று முன்தினம் 9 மணியளவில் தனது கடைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரை வழிமறித்த சில தீவிரவாதிகள் கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டனர்.

இரத்த வெள்ளத்தில் மயங்கி சாய்ந்த லாலா டேல் சோஸ், வைத்தியசாலைக்கு தூக்கிச் செல்லும் வழியில் பரிதாபமாக உயிரிழந்தார்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னரும் இதுபோன்றதொரு கொலைவெறி தாக்குதல் சம்பவத்தில் இருந்து மயிரிழையில் உயிர்பிழைத்த லாலா டேல் சோஸ், நேற்று முன்தினம் தாக்குதலில் பலியான சம்பவம் இந்நகரில் வாழ்ந்துவரும் சீக்கிய மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# போருக்குப் பின்னர் அரசியல் தீர்வு குறித்து கலந்துரையாடக்கூட யாரும் விரும்பவில்லை

## சம்பந்தன் மீதும் பழிபோடுகிறார் மகிந்த



(கொழும்பு)

**போருக்குப் பின்னர் தாம் அரசியல் தீர்வுக்குச் செல்ல விரும்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த போதிலும் அவர்கள் தம்முடன் கலந்துரையாடக் கூட விரும்பவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது, போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டை ஒன்றுபடுத்த தவறிவிட்டதாக குற்றச்சாட்டு எழுப்பப்படுவது குறித்து, மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதில்கொஞ்சம்உண்மை உள்ளது என்று மகிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொண்டார்.

பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க வேண்டும்என்றுநினைத்தேன் அதில் நான் அரசியல் செய்யவில்லை. உயிர் வாழ்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் முதலில் கொடுத்தேன்.

துரதிர்ஷ்டவசமாக மக்களின் தேவைகளை தவறாக மதிப்பிட்டு விட்டேன். வடக்கிலுள்ள தமிழர்கள் 2015 இல் எனக்கு எதிராக வாக்களித்தனர்.

இதில் அரசியல் வாதிகளும் புலம்பெயர்ந்தோரும் செல்வாக்குச் செலுத்தினர்.

அரசியல் தீர்வு நோக்கி செல்வதற்கு நான் சம்பந்தனுக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தேன்.

அந்த நேரத்தில் அவர்கள் என்னுடன் இணைந்து எதையும்செய்ய விரும்பவில்லை.

என்னுடன் கலந்துரையாடுவதற்குக் கூட அவர்கள் விரும்பவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். (இ-3)

## சுமந்திரனின் கருத்து பிழை





### முன்னாள் அமைச்சர் பீரிஸ் விசனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு தீர்ப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளியிட்ட கருத்து பிழையானது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முழு உலகமும் இலங்கை நீதிமன்றின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது.

ரவிராஜ் கொலை வழக்கு தீர்ப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

சிங்கள ஜூரிகளினால் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட காரணத்தினால் வழக்குத் தீர்ப்பினை ஏற்றுக் கொள்ள முடியாது என சுமந்திரன் கூறியிருந்தார்.

நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் கொலை வழக்கு சந்தேக நபர்கள் நீதிமன்றின் எதிரில் வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டுமா? அல்லது ஜூரிகளினால் விசாரணை செய்யப்பட வேண்டுமா? என்பது குறித்து தீர்மானிக்க முடியும்.

இவ்வாறான பின்னணியில் சிங்கள ஜூரிகள் பங்கேற்றதனால் வழக்கு விசாரணை தீர்ப்பினை ஏற்றுக் கொள்ள முடியாது என கூறுவது நியாயமாகுமா? இவ்வாறான கருத்துக்களினால் நீதிமன்றம் குறித்த நம்பிக்கைக்கு குந்தகம் ஏற்படும்.

மேலும், இவ்வாறான கருத்துக்களினால் சிங்கள, தமிழ மக்களுக்கு இடையிலான இடைவெளி மேலும் அதிகரிக்கும் என முன்னாள் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## மகிந்த அரசாங்கத்திற்கு எதிராக டொப் 100 திட்டம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக டொப் 100 திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகம் சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன் முதல் கட்டமாக அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் தொடர்பிலான தகவல்கள் வெளிப்படுத்தப்படும்.

இந்த தேர்தல்கள் நாட்டில் இடம்பெற்ற மிகவும் ஊழல் மோசடிகள் மிக்க தேர்தலாகும்.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் இணைப்பு தேர்தல் நடத்துதல் முறைமைகளில் மோசடி இடம்பெற்றுள்ளது.

இந்தமோசடிகளுக்குகூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், ஆணையாளர்கள் உள்ளிட்டவர்கள் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

போலி உறுப்பினர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின்பெயர்களைப்பயன்படுத்தி தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இது மகிந்த ராஜபக்ஷ முறையின் அடிப்படையில் மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் இதற்கு எதிராக நீதிமன்றின் உதவி நாடப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## போட்டி முடிவுகள் வெளியீடு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய வாசிப்பு மாதச் சிறப்புக் கட்டுரைப் போட்டி 'வாசகர் மனப்பதிவு' போட்டி முடிவுகள்முதல்மூன்று இடங்களைப் பெற்று பரிசு பெறுபவர்களின் விபரம வருமாறு:

பிரிவு 01 (4, 5 ஆண்டுகள்)

கே.யுகரிஜி- மட்/ கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம், செல்வன் சு.டிறோஜன- மட்/ கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம. எம். எம். அத்னாஹலீமா- திருகோணமலை/ கிண்ணியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்.

பிரிவு- 02 (6, 7, 8 ஆண்டுகள்)

தி.கஜானி - தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம். ஹ.கோபிஷா- மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை. மு.க. பாத்திமா சனோபர்- திருகோணமலை கிண்ணியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்.

பிரிவு-03 (9, 10, 11 ஆண்டுகள்)

உ.ஜாமனை -கொ/ விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. செல்வன் சி.லோகரமணன் - விபுலானந்தா மத்திய கல்லூரி காரைதீவு, ப.சங்கவி-இணுவில் மத்திய கல்லூரி இணுவில்.

பிரிவு-4 (12, 13 ஆண்டுகள்)

கி.அபிஷாயினி -கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி. டிலானி மகாலிங்கம் - திரு/ஸ்ரீகோணலிங்க மகா வித்தியாலயம், சிவனுஜா சிவராஜா- யா/ வேலணை மத்திய கல்லூரி.

பிரிவு- 5 (திறந்த போட்டி)

திருமதி ப.ஸ்ரீகேதீஸ்வரன்- 62/22 கண்டி வீதி, திருகோணமலை, திருமதி சத்தியபவானி செபமாலைதாசன்- யா/ இந்து மகளிர் கல்லூரியாழ்ப்பாணம், க.சரவணமுத்து- இல. 8, 4/3, ஹம்டன் ஒழுங்கை, கொழும்பு 06.

பரிசளிப்பு விழா பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சங்கப் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-3)

## அபிவிருத்தி விசேட சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றியே தீரும்

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மாகாண சபைகளில் தோற்கடிக்கப்பட்டாலும் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் அரசால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மாகாண சபைகளின் கருத்துக்களை அறிவதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தாலும் மத்திய அரசாங்கம் இதனை நிறைவேற்றுவதற்கு மாகாண சபைகளின கருத்துக்கள் அவசியமில்லையென்றும் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மாகாண சபைகளில் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த சட்டமூலமானது "விசேட அமைச்சர்" ஒருவரை உருவாக்காது. ஆனால் முதலீட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இலகுவான சூழ்நிலையொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மஹாவலி திட்டம், கல்ஓயா திட்டம் மற்றும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஆகிய திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இதுபோன்ற சட்டமூலம் கொண்டுவரப்பட்டிருந்தது.

நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தமது ஒத்துழைப்பை வழங்க மாகாண சபைகள் விரும்பவில்லையாயின் மத்திய அரசாங்கம் நேரடியாக இதனை அமுல்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது விவாதத்துக்கு உள்ளாகிவரும் சட்டமூலம் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படும் போது அதில் திருத்தங்களை உள்வாங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டால் மைத்திரியின் கீழ் கடமையாற்ற தயார்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிரதமர் பதவியொன்று வழங்கப்படும் பட்சத்தில் இணைந்து கடமையாற்ற தயார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை சந்தித்த சந்தர்ப்பத்திலேயே அவர் இந்த விடயத்தைக் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின் போது, "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிரதமர் பதவியொன்று வழங்கப்படும் பட்சத்தில், ஜனாதிபதியுடன் இணைந்து கடமையாற்ற தயாரா?" என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, "தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அந்த செயற்பாட்டை செய்ய முடியும் என்றால், 1970ஆம் ஆண்டு முதல் நன்றாக தெரிந்த ஒருவருடன் இணைந்து தனக்கு கடமையாற்ற முடியாதா? எனக் கேள்வியெழுப்பிய அவர், அவ்வாறான நிலைமையொன்று உருவாகும் பட்சத்தில், அது தனது நிபந்தனைகளின் பிரகாரமே இடம்பெற வேண்டும் எனவும் தெரிவித்தார்.



மேலும் அரச தலைவராகாமல், தனக்கு நாட்டை மீண்டும் ஆட்சி செய்ய முடியும எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-3)

# ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு இனவாதிகளுக்கு ஆதரவு

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு இனவாதிகளின் கருத்துக்களை பிரசாரம் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசாரதேரர் முஸ்லிம்கள் தொடர்பாக ஒரு மோசமான இனவாதக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

நல்லிணக்கத்தைத் தகர்க்கும் இந்த மோசமான கருத்து அடங்கிய வீடியோவை ஜனாதிபதி ஊடகப்பிரிவு சகல ஊடகங்களுக்கும் வழங்கியிருந்தது.

ஒரு சிறுபான்மை இனத்தின் மீது அபாண்டமாக வெளியிடப்பட்ட கருத்தை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மக்கள் மயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் இனவாதிகளின் கருத்துக்களை பிரசாரம் செய்யும் தங்களின் ஜனாதிபதி ஊடக பிரிவு தொடர்பாக கடந்த 22.12.2016 அன்று, தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத் தளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக தங்களின் உத்தியோகபூரவ வாசஸ்தலத்தில் இடமபெற்ற கலந்துரையாடலின் போது பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் முஸலிம்கள் தொடர்பாகவும் மற்றும் இஸ்லாமிய போதனைகள் தொடர்பாகவும் உண்மைக்கு புறம்பான இனவாதக் கருத்துக்களை உங்கள் முன்னிலையில் வெளியிட்டிருந்தார்.

இந்நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக மோசமான நச்சுக்கருத்துக்களை பரப்பி வரும் ஞானசார தேரர் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத் தளங்களை அழி ப்பதற்கு முஸ்லிம்களுக்கு இஸ்லாம் போதனை செய்வதாக அபாண்டமான இன வாத ரீதியிலான கருத்தை வெளியிட்டிருந்தார்.

இந்த நாட்டில் வாழும் ஒரு சிறுபான்மை இனத்திற்கெதிராக ஞானசார தேரரினால் தங்களின் முன்னிலையில் முன்வைக்கப்பட்ட இந்த நச்சுக் கருத்து அடங்கிய வீடியோ பதிவை தங்களது ஜனாதிபதி ஊடகப் பிரிவு சகல ஊடகங்களுக்கும் வெளியிட்டும் இருக்கிறது. தாங்கள் இந்நாட்டில் நல்லிணக்கம் கொண்ட நல்லாட்சியை உருவாக்க செயலாற்றும் இத்தருணத்தில் தாங்களது ஊடகப் பிரிவு நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் ஞானசார தேரரின் இனவாதக் கருத்தை நல்லாட்சியின் அரசாங்க வளங்களைப் பயன்படுத்தி அரச அங்கீகாரத்தோடு மக்கள் மயப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தங்களது ஊடகப் பிரிவு வெளியிட்டிருக்கும் இந்த வீடியோ இனவாதிகளுக்கு உறுதுணையாய் அமையப் போகிறது என்பது மட்டும் தெளிவாகிறது.

நல்லாட்சிக்கும் நல்லிணக்கத்திற்கும் பொருத்தமில்லாத இந்த செயற்பாடு தொடர்பாக உங்கள் ஊடகப் பிரிவு மீது விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறும் தயவாய் வேண்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# எலியைப்போல அமைதியாக இருக்கிறது இந்தியா-மகிந்த

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தியா எலியைப் போல அமைதியாக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சீன நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்துக்கு வந்த போது, இந்திய நண்பர்கள் எல்லோருமே எனக்கு எதிராக குரல் எழுப்பினர். ஆனால இப்போது அவர்கள் எலியைப் போல அமைதியாக இருக்கின்றனர்.

அப்போது அவர்கள் வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்தனர்.

திருகோணமலை, காங்கேசன்துறை துறைமுகங்கள் அல்லது பலாலி விமான நிலையத்தை மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தம்மிடம் தரும் என்று எதிர்பார்த்து, இந்தியா இப்போது மௌனமாக இருக்கக்கூடும்.

இந்தியாவுடன் எட்கா உடன்பாடு செய்து கொள்ளக் கூடாது. இந்த உடன்பாட்டை செய்து கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க அழுத்தம் கொடுக்கிறார்.

ஆனால் இந்தியா இதனைச் செய்து கொள்ளக் கூடாது. இந்த விடயத்தில் இந்தியா கவனமாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் மக்கள் எதிராக இருக்கும் போது, இந்த உடன்பாட்டை செய்து கொள்வது இந்தியாவுக்கும் நல்லதல்ல. எமக்கும் நல்லதல்ல என்றும் அவர் மேலும் தெரிவிந்துள்ளார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## சிறு செலவுகள் வைக்கலாமா?

நமக்காக தாராளமாக செலவு செய்ய முன்வருபவர்கள் ஓர் ரகம். செலவு செய்துவிட்டு அதைச் சொல்லிக் காண்பிக்கிறவர்கள் ஓர் ரகம். அதற்காகப் புலம்புகிறவர்கள் ஓர் ரகம்.

சிலபேர் வெளியே சொல்லாவிட்டாலும் உள்ளுக்குள் நமக்காக செய்த செலவையே நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

செலவுகளில் சின்னச் சின்னச் செலவுகள் தாம் பெரிய மனத்தாங்கல்களை உண்டு பண்ணி விடுகின்றன என்பதை நாம் நடைமுறையில் பார்க்க முடியும்.

ஒருவர் தன் திருச்சி நண்பருக்கு ரயில் டிக்கெட் எடுக்கச் சொல்லி எழுதினார். கடைசி நிமிடம் போக முடியாமல் போய் விட்டது. டிக்கெட்டைக் கான்சல் செய்யச் சொல்லி திருச்சி சென்ற நபர் மூலமாகக் கடைசி நிமிடம் சொல்லி அனுப்பினார். 60 சதவிகிதப் பணம் நட்டம். திருச்சி நண்பருக்கு ஒரே எரிச்சல்; மன வருத்தம் வீணே அலைய வைத்ததுமல்லாமல் செலவு வேறல்லவா வைத்துவிட்டார்! இந்த 60 சதவிகித நட்டத்தைப் பற்றி அந்த மனிதர் பேச்சே எடுக்கவில்லை. பெரிய வெடி வெடிக்க சிறு நெருப்புப் பொறி போதுமே ! ஒன்று பத்தாகி பத்து நூறாகி நட்பே முறிந்து போனது.

கடிதத்திலே இந்த மனிதர், "உங்களுக்கு வீண் அலைச்சல் வைத்துவிட்டேன். கேன்ஷலேசன் தொகை என்ன என்று தயவு செய்து எழுதுங்கள்" என இரண்டு வாக்கியங்களை எழுதியிருந்தால் விடயம் போகும் திசையே வேறு.

ஒரு விழுப்புரம் நண்பர் தன் மிக்ஷியைப் பழுது பார்க்க சொல்லிச் சென்னைக்குத் தன் நண்பருக்கு ஒரு லொறிப் பார்சல் சர்வீஸ் மூலம் அனுப்பினார். -To pay - போட்டு சிறு செலவு தான். Paid போட்டல்லவா அனுப்பியிருக்க வேண்டும்? பழுது பார்த்த கூலி கிடைத்தது. லொறித் தொகை நின்று போனது, சிறு தொகைதான். ஆனால் அது மனஸ்தாபத்தில் போய் முடிந்தது.

ஒருவர் தன் நண்பருக்காக எடுத்த இரு சினிமா டிக்கெட்டுகளை விற்கப் போனார். விற்க முடியவில்லை. எட்டு ரூபாய் நட்டம்!

அல்பமான தொகைகள் தாம் நட்பிலும் உறவிலும்,விரிசலை ஏற்படுத்தி விடுகின்றன, அந்தத் தொகையை நீட்டாவிட்டாலும் குறைந்தபட்சம், அதைப்பற்றி விசாரித்து அக்கறை காட்டக்கூட ஏன் தயங்க வேண்டும்? வருத்தப்படுவதாகச் சொல்லாமல் அதிலிருந்து ஏன் நழுவ வேண்டும்? மற்றவர்கள் நமக்காகச் செலவு செய்யக் கடமைப்பட்டவர்கள் என நாம் ஏன் நினைக்க வேண்டும்?

ரயில் டிக்கெட் இரத்துத் தொகையையும் லொறிப் போக்குவரத்துத் தொகையையும் டிக்கெட் விற்காததால் ஏற்பட்ட நட்டத் தொகையையும் உரியவர்களிடம் நீட்டினால் வருத்தப்படுவார்கள்; குற்றமாக எடுத்துக் கொள்வார்கள் என நாமாகக் கற்பனை செய்து கொள்வானேன்?

அத்தகைய செல்வுகளை மனத்தில் கொண்டு இந்தாங்க இது ஒரு புது மொடல் பேனா. உங்களுக்கு ரொம்பவும் உபயோகப்படும் என்று எதையேனும் பரிசாகத் தரலாம்.

இந்தாங்க! இதுதான் புதிதாய் ரிசர்வ் பாங்க் கொண்டு வந்திருக்கிற ஐந்து ரூபாய் இந்திரா காந்தி காசு வெளியில் கிடைக்காது. வச்சுக்குங்க என நாகரிகமாக நீட்டலாம்.

மற்றவர்களுக்கு வீணாகச் சிறு செலவு கூட வைக்காத மனிதர் என்று மட்டும் பெயர் எடுத்துவிட்டால் போதும் நம்மை அனைவரும் விரும்புவதற்கான ஒரு மிகப் பெரிய ஏற்பாட்டைச் செய்து விட்டோம் என்று அதற்குப் பொருள்.

**லேனா தமிழ்வாணன்**

# ராம மோகனராவ் மீது மேல்நடவடிக்கையின்றி தயங்கி நிற்பது ஏன்?-மு.க.ஸ்டாலின் கேள்வி

(சென்னை)

ராம மோகன ராவ் அளித்த பேட்டிக்கு பிறகு மேல் நடவடிக்கை இல்லாமல் தயங்கி நிற்பது ஏன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக எதிர்க்கட்சி தலைவரும், தி.மு.க. பொருளாளருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது.

குதிரையை விட்டு விட்டு லாயத்தை பூட்டுவது என்பது மத்திய அரசின் கறுப்புப் பண ஒழிப்பு நடவடிக்கைக்கு சரியான உதாரணமாக திகழ்கிறது. 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று, நவம்பர் 8 ஆம் திகதி இரவில் பிரதமர் நரேந்திர மோடி ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பால் மக்களுக்கு, குறிப்பாக ஏழைகள், விவசாயிகள், சிறு வணிகர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், மாத ஊதியம் பெறுவோர், நடுத்தர வர்க்கத்தினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்பட்ட மிக மோசமான பாதிப்புகள் இதுவரை தீரவில்லை என்பது மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது.

கறுப்பு பண ஒழிப்பு வரவேற்கப்பட வேண்டியது தான. ஆனால் மத்திய அரசின் குளறுபடிகள் எல்லாம் கறுப்பு பண முதலைகளுக்கு எந்த நெருக்கடியையும் தராமல், ஏழை-நடுத்தர மக்களுக்கு இமாலய துன்பத்தை கொடுத்திருப்பதை யாராலும் மறக்க முடியாது.

குறுகிய கால சிரமம், நீண்ட கால பயன் என்று பிரதமரும் மத்திய அரசும் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாலும் இன்றைக்கு மக்களுக்கு எஞ்சியிருப்பதும், நிலைத்து நிற்பதும், நீங்கா துயரம் மட்டுமே என்பதை பார்க்கும்போது, கறுப்பு பணம் ஒழிப்பு என்ற ஒரு மிக முக்கியமான முடிவை மத்திய அரசு எந்த வித திட்டமிடலும் இன்றி எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற விதத்தில் அறிவித்து உள்ளது என்பது வெட்ட வெளிச்சம் ஆகியிருக்கிறது. முதலில் கறுப்பு பணம் என்று தொடங்கிய மத்திய அரசு இப்போது ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை என்ற அளவில் வந்து நிற்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போன்ற கொடுமை என்னவென்றால் பாராளுமன்றத்தில் இது குறித்த முழு விவாதத்திற்கு மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசோ, பிரதமரோ முன்வர பிடிவாதமாக மறுத்தது தான். பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள எந்த அரசும் இது போன்ற விவாதத்திற்கு வழி விட மறுத்தது இல்லை. ஆனால் பா.ஜ.க. அரசு இந்த விடயத்தில் பாராளுமன்றத்தில் 125 கோடி மக்களின் பிரச்சினையை விவாதிக்க மறுத்து இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்படுத்திய தலைகுனிவு, வரலாற்றில் கறை படிந்த பக்கங்களாகவே இருக்கும்.

தமிழகத்தில் இருக்கும் அ.தி.மு.க. அரசு மக்களின் சிரமங்களைப் போக்க முயலாமல் வங்கி வரிசைகளில் பசியும் பட்டினியுமாக பல நாட்கள் நின்றதை கண்டு கொள்ளாமல் இருந்ததை மக்கள் நிச்சயம் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள்.



இந்த உயர் மதிப்புடைய பண நீக்க நடவடிக்கையைத் தொடர்ந்து தமிழகத்தில் வருமான வரித்துறையினர், தலைமைச் செயலாளர் ராம மோகன ராவ் வீட்டில் ரெய்டு நடத்தினர். தமிழக நிர்வாகம் நடக்கும் தலைமைப் பீடமான தலைமைச் செயலகத்திற்குள் மத்திய துணை இராணுவத்தின் துணையுடன் ரெய்டு நடத்தப்பட்டது. அதற்கு முன்பு மணல் ஒப்பந்ததாரர் சேகர் ரெட்டி வீடு மற்றும் அலுவலகத்தில் ரெய்டு செய்யப்பட்டது. சேலம் மற்றும் கடலூர் மத்திய கூட்டுறவு வங்கிகளில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினார்கள். இந்த சோதனைகள் எல்லாம் கறுப்பு பண ஒழிப்பு நடவடிக்கை மட்டுமா அல்லது ஊழலுக்கு எதிரான நடவடிக்கையா என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவின் சவால் பேட்டிக்குப் பிறகும் மேல் நடவடிக்கை இல்லாமல் தயங்கி நிற்பது ஏன், யாரைக் காப்பாற்ற இந்த தயக்கம் என்பது எல்லாம் மூடி மறைக்கப்பட்டு, மூடு பனியாகவே இருக்கிறது.

எல்லாம் சரியாகி விடும். 50 நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். ஆனால் இன்று 50 நாட்கள் கழிந்தும் மக்களின் சிரமங்கள் குறையவில்லை. ஆகவே இதுவரை மக்கள் படும் இன்னல்களை கண்டுகொள்ளாமல் இருந்தது போல் இனியும் மத்திய அரசு வேடிக்கை பார்க்காமல் வங்கி செயற்பாடுகளை சீர் செய்ய வேண்டும்.

வங்கிகளுக்கு தேவையான புதிய ரூபாய் நோட்டுகளை உடனடியாக வழங்கி பணம் எடுப்பது திருமண செலவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு மத்திய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தி சகஜமான வங்கி செயற்பாடுகள் திரும்பவும், உரிய நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும். அதுமட்டுமன்றி இந்த திட்டத்தால் பொருளாதாரத்திற்கு என்ன பயன் கிடைத்துள்ளது, எத்தனை கறுப்பு பண முதலைகள் பிடிபட்டுள்ளார்கள் என்பது குறித்தும் மக்களுக்கு தெரியப்படுத்த ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும் என மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஐரோ. நாடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!

லண்டன், பாரிஸ் மற்றும் ஜேர்மன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சர்வதேச பொலிஸார் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. புது வருட கொண்டாட்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் களைகட்டியுள்ள நிலையில், மக்கள் அதிகமாக ஒன்று கூடும் இடங்களை தீவிரவாதிகள் இலக்கு வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பெல்ஜியம் நாட்டின் தலைநகரில் 14 வயதுடைய சிறுவன் ஒருவனின் பையில் இருந்து பல குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட குண்டுகளில் “Allah Akbar” என எழுதப்பட்டிருந்ததாகவும், சர்வதேச ஊடகமான "எக்ஸ்பிரஸ்" வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளில் பல இடங்களில் தீவிரவாத தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில், தற்போது பெல்ஜியத்தில் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இதனையடுத்தே ஐரோப்பிய நாடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜேர்மன் மற்றும் துருக்கி போன்ற நாடுகளில் தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதில் ஜேர்மன் தலைநகர் பெர்லினில் நத்தார் சந்தையில் கனரக வாகனம் ஒன்றை மோதச் செய்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 12 பேர் வரையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைகோ போய்விட்டார் குஷியில் விஜயகாந்த்

மக்கள் நலக்கூட்டணியில இருந்து வைகோ விலகியதால விஜயகாந்த் சந்தோசத்தில் இருப்பதாக தே.மு. தி.க. நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார். ஏனெனில், நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் ம.ந.கூ வின் முதல்வர் வேட்பாளராக விஜயகாந்தை அறிவித்தது தவறு. அவரை முதல்வர் வேட்பாளராக அறிவித்ததாலேயே, கூட்டணிக்கு தோல்வி ஏறபட்டு விட்டது போன்று கருத்துக் கூறினார். வைகோவின் இந்தக் கருத்து விஜயகாந்தை மட்டுமல்லாமல் தே.மு.தி.க. தொண்டர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்நிலையில் மக்கள் நலக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டு, வைகோ அதில் இருந்து விலகினார் என்றதும் விஜயகாந்த் மிகவும் சந்தோசமாக உள்ளார்.

ம.ந.கூட்டணியில் இருந்து வைகோ விலக காரணமாக இருந்த மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர்கள் சிலரிடம் இது குறித்து பேசியுள்ளார்." தேவையானால் நல்ல சந்தர்ப்பத்தில் மீண்டும் கூட்டணியில் இணைவேன் என்றும் விஜயகாந்த் கூறியுள்ளார்.

மேலும், வைகோ எங்கேனும் விஜயகாந்த் குறித்து விமர்சித்தால் அவருக்கு தக்க பதிலடி கொடுக்கவும், தே.மு. தி.க தலைவர்கள் தயாராக உள்ளனர் என தே.மு.தி.க. நிர்வாகி கூறியுள்ளார். (இ-7)

# சென்னை விமான நிலையத்தில் பார்வையாளர்களுக்கு 1 மாதம் தடை

(ஆலந்தூர்)

மத்திய உளவுத்துறை எச்சரிக்கையால் சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு நலன் கருதி ஒரு மாதம் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதேவேளை 5 அடுக்கு பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

புத்தாண்டு, பொங்கல் விழா மற்றும் குடியரசு தின விழா கொண்டாட்டத்தை தீவிரவாதிகள் சீர்குலைக்க திட்டமிட்டு உள்ளதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து இந்தியாவில உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தும்படி மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

அதன்படி சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களில் பலத்த பாதுகாப்பு ஏறபாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமான நிலைய பொலிஸார், மத்திய தொழிற்படையினர், பாதுகாப்புப் படையினர் கொண்ட கூட்டு பாதுகாப்பு பணி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் உள் பகுதிகளில் மத்திய தொழிற்படையினர் கண்காணிப்பு கமரா மூலம் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் நுழைவுப் பகுதியில் பலத்த சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.

விமான நிலைய நுழைவு வாயில் பகுதியில் பொலிஸார் வாகனங்களை தீவிரமாக சோதனை செய்து அனுமதிக்கின்றனர். பாதுகாப்பு நலன் கருதி விமான நிலையத்தில் பார்வையாளர்கள் அனுமதி வழங்குவதற்கு நேற்று முன்தினம் முதல் ஜனவரி மாத இறுதி வரை ஒரு மாதத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. மேலும் விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

இதுபோன்ற முக்கியமான தினங்களில் பாதுகாப்பு நலன் கருதி சென்னை விமான நிலையத்தில் பார்வையாளர்களுக்கு இரு வாரங்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஒரு மாதத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கிரேக்க தூதர் எரித்துக் கொலை



(ரியோ டி ஜெனீரோ)

பிராசிலியாவுக்கு புத்தாண்டு கொண்டாட காரில் சென்ற கிரேக்க தூதர் தனது காருக்குள் எரிந்த நிலையில் சடலமாகக் கிடந்தார். அவர் உயிரிழந்ததற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

பிரேசில் நாட்டின் கிரேக்க தூதராக கிரிய கோஸ் அமிரிதிஸ் (வயது-59) பதவி வகித்தார்.

இவர் ரியோ டி ஜெனிரோவில் உள்ள கிரேக்க தூதரகத்தில் பணிபுரிந்தார். அவரது வீடு நோவா இகுயாசூ நகரிலுள்ளது. இது ரியோ டி ஜெனிரோவின் புறநகராகும்.

சம்பவத்தன்று ரியோ டி ஜெனிரோவில் இருந்து பிராசிலியாவுக்கு புத்தாண்டு கொண்டாட காரில் பயணம் செய்தார். ஆனால் திடீரென அவர் மாயமானார்.

அதைத் தொடர்ந்து அவரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். இதற்கிடையே அவர் ரியோ டி ஜெனிரோவில் தனது காருக்குள் எரிந்த நிலையில் சடலமாமாக கிடந்தார்.

எனவே அவர் பிணைத் தொகைக்காக மர்ம கும்பலால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

ஆனால் அது போன்று நடக்க வாய்ப்பில்லை என பொலிஸார் தெரிவித்தனர். அவரது மர்ம மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (இ-7)

# பேரிகை மீண்டும் பொது நிகழ்வுகளில் அறிமுகம்





(படங்கள்: பொ.சோபிகா)

காரைநகர் பிரதேச செயலகத்தால் தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவியான பேரிகை மீண்டும் பொது நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர்களின் தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த வாத்தியம் முழக்கப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் பிரதேச செயலக கலாசார விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுமார் ஐந்து அடி விட்டம் கொண்ட பேரிகை முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர். பேரிகை என்பது பழந்தமிழர்களின் வாத்தியங்களில் முக்கியத்துவம் பெற்றதாகும். குறிப்பாக தமிழ்நாட்டில் வாழ்ந்த மன்னர்கள் இதனை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

தமிழ் அரசர்களின் போர்ப் பிரகடனம், வெற்றிச் செய்திகள், அரச கட்டளைகள், ஊர்வலங்கள், திருமணச் செய்திகள் போன்றவற்றை மக்களுக்கு அறிவிப்பதற்கு இந்தப் பேரிகை பயன்படுத்தப்பட்டது.

மன்னர்கள் தலைமையில் படைகள் போருக்குச் செல்லும் போது போர்ப் பேரிகை முழங்கப்பட்டது. போர் முடிந்து திரும்பும்போது வெற்றிப் பேரிகை முழங்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட யானையின் முதுகின் மேல் பாரிய பேரிகையை வைத்து முழக்குவார்கள்.

இந்தப் பேரிகையின் அடுத்த வடிவமாகவே முரசு என்ற வாத்தியம் உருவானது. இத்தகைய பெருமை மிகுந்த தமிழர்களின் வாத்தியம் இன்று பயன்பாடற்று, வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கும் நிலையில், காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை அதனை தற்போது வெளிக்கொண்டு வந்திருக்கின்றது. காரை நகரைச் சேர்ந்த கலைஞர் சின்னையா சோமசேகரம் பிள்ளை இந்த வாத்தியத்தை வடிவமைத்திருந்தார்.

காரைநகர் - மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய 2016 ஆம் ஆண்டு வருடாந்த மஹோற்சவத்தின்போது வேட்டைத் திருவிழாவன்று இந்த வாத்தியம் முழங்க சுவாமி வேட்டைக்குச் சென்றார்.

இந்த வாத்தியத்தை வடிவமைத்த கலைஞருக்கு பிரதேச செயலகம் "கலைஞானச் சுடர்" விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. (இ-9)

## கர்நாடக இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, அவுஸ்திரேலியா, மெல்பேர்ன், நல்லை ஸ்வரலயா இசைக்கல்லூரி மாணவி செல்வி. நிர்மிதாவின் கர்நாடக இசை நிகழ்வு, பக்க வாத்தியம் சகிதம் நடை பெறும்.

இசை ஆர்வலர்கள் அனைவரும் பங்கு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கொடுப்பனவுக்கான நிதி குறைப்பு





(யாழ்ப்பாணம்)

சமூக சேவைத் திணைக்களம் கடந்த ஆண்டு முள்ளந்தண்டு வடம் பாதித்தவர்கள் மற்றும் சிறுநீரகம் பாதித்தவர்களுக்கு கொடுப்பனவுகளை நோய்க்கொடுப்பனவில் இணைந்து வழங்கி வந்தது. முள்ளந்தண்டு வடம் பாதித்தவர்களுக்கு 1500 இலிருந்து 3000 வரையும் சிறுநீரகம் பாதித்தவர்களுக்கு 1000 வீதமாகவும் வழங்கி வந்தது. இவ்விரண்டு கொடுப்பனவுகளும் வடக்கு மாகாணப் பயனாளிகளுக்கு மிகவும் பொருத்தமான கொடுப்பனவாகும். ஆனால் திடீரென சமூக சேவைத்திணைக்களத்திற்குரிய இக் கொடுப்பனவுக்கான நிதி குறைக்கப்பட்டதால் சமூக சேவைப் பணிப்பாளர் புதிய பயனாளிகளை இணைக்க வேண்டாம் என சகல பிரதேச செயலக சமூக சேவை அலுவலர்களுக்கு பணித்துள்ளார். வடக்கு மாகாணத்தில் போரினாலும் பிறப்பிலும் பலர் முள்ளந்தண்டு வடம் பாதித்துள்ள நிலையில் புதிய பயனாளிகள் இணைக்க வேண்டாம் என சுற்று நிருபத்துக்கு சமூக நலனில் அக்கறை கொண்ட பலரும் கவலை தெரிவித்துள்ளனர். முதலமைச்சரும் சமூக சேவை அமைச்சை வகிப்பவருமான முதலமைச்சர் நிதி அதிகரித்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 943

Search for people, places and things
Nagendram Home

பவன்





பாடு




ராகுலன்





சுது




கஜா



ரதி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சிறுவர் அரங்கம்

## மாம்பழம்

ஒரு ஊர்ல கணவன் மனைவி சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் வீட்டில் ஒரு மாமரம் இருந்தது. அதற்கு சரியாக உரம் போடாததால் அது பூ பூத்து பழம் அழுகி கீழ விழுந்து விடும்.

அவளுக்கு அதில் உள்ள பழத்தை சாப்பிட வேண்டும்

என்று ஆசை உடனே தன் கணவரிடம் அடுத்த சீசனில் நல்ல உரம் வாங்கி போடுங்கள் என்றாள.


அவனுக்கும் எல்லா கணவரும் போல சரி என்று சொல்லி விட்டு பிறகு அப்படியே மறந்து விட்டான்.

அந்த சீசனும் அப்படியே போய்விட்டது.

அவளும் அடுத்த சீசனுக்காவது உரம் வாங்கி போடுங்கள் என்றாள.

மறுபடியும் அப்படியே மறந்து போய்ட்டான். மறுபடியும் அதே போல் பழம் அழுகி போய்விட்டது. அவளும் கோபம் அடைந்து உடனே அவனை கையோடு கடைக்கு கூட்டிட்டு போய்ட்டாள்.

அவனும் நீ போய் தேவையானதை வாங்கிட்டு இரு நான் பக்கத்துல போய்ற்று வந்து விடுகிறேன் என்று சொல்லிட்டு போய் விட்டான் அவன் ஒரு பழக்கடைக்கு போய் இரண்டு கூடை நிறைய மாம்பழம் வாங்கி விட்டு வீட்டுக்கு போய் எல்லா மாம்பழத்தையும் நூலில் கட்டி மரத்தில் தொங்க விட்டான்.



பிறகு அவளை கூப்பிட கடைக்கு போனான். அவளுக்கு கடைக்கு போன உடன் தான் வாங்க வந்த உரத்தை தவிர தனக்கு பிடித்த அனைத்தையும் வாங்கிவிட்டாள்.

பிறகு தன் கணவருடன் வீட்டுக்கு வந்தால். மரம் முழுவதும் மாம்பழமாக இருந்தது.

அதை கண்ட உடன் அவள் ஆச்சரியத்துடன் நின்றாள். தன் கணவரிடம் எப்படிங்க

அதுக்குள்ள இவ்வளவு பழம் என்றால்.

அதற்கு அவன் நீ உனக்கு பிடித்த மாம்பழம் வேணும்தானே ஆசைப் பட்ட அதனால்

தான் நான் மாம்பழத்தை கட்டி தொங்க விட்டிருக்கேன் ஆனால் உரம் போட்டாள் இரண்டு வருஷம் நல்ல பழத்தை கொடுத்துவிட்டு பிறகு அந்த மண்ணில் உள்ள இயற்கையான சத்து கூட அழிந்து போய்விடும் என்றான்.

ஆசையே அழிவிற்கு காரணம்...



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - சிசிலியில் இருந்து 100.000 யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1599 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவுக்கான தனது கப்பல் பயணத்தை ஆரம்பித்தது.
- 1687 - நன்னம்பிக்கை முனையை அடைவதற்காக ஹியூகெனாட் எனப்படும் புரட்டஸ்தாந்தர்களின் முதற் தொகுதியினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- 1695 - இங்கிலாந்தில் பலகணி வரி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து பல அங்காடி உரிமையாளர்கள் தமது அங்காடிகளின் பலகணிகளை செங்கல் கொண்டு மூட ஆரம்பித்தார்கள்.
- 1857 - விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவாவைத் தேர்ந்தெடுத்தார்.
- 1862 - அமெரிக்கப் புரட்சிப் போர்: மேற்கு வேர்ஜீனியாவை கூட்டணியில் இணைப்பதற்கான சட்டமூலத்தில் ஆபிரகாம் லிங்கன் கையெழுத்திட்டதில் வேர்ஜீனியா இரண்டாகப் பிரிந்தது.
- 1879 - வெள்ளொளிர்வு விளக்கு முதற்தடவையாக தொமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1881 - இலங்கை முழுவதும் கடுமையான நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1909 - மான்ஹட்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1923 - லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணியோசை மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1847 - ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- 1963 - மத்திய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.
- 1984 - ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- 1986 - புவேர்ட்டோ ரிக்கோவில் சான் ஜுவான் நகரில் உணவுசாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தினால் 97 பேர் கொல்லப்பட்டு 140 பேர் காயமடைந்தனர்.
- 1987 - ரொபேர்ட் முகாபே சிம்பாப்வேயின் அதிபராகத் தெர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1991 - சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அனைத்து நிறுவனங்கள், மற்றும் சோவியத் ஒன்றியம் இந்நாளில் இருந்து அதிகாரபூர்வமாக கலைக்கப்பட்டன.
- 1994 - பீனிக்ஸ் தீவுகள், மற்றும் லைன் தீவுகளில் நேரமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து, கிரிபட்டியில் இந்நாள் முற்றாக விலக்கப்பட்டது.
- 1999 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் அதிபர் பதவியிலிருந்து விலகினார்.
- 1999 - 1977 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.
- 1999 - 155 பயணிகளுடன் இந்திய விமானம் ஒன்றைக் கடத்திய ஐந்து கடத்தல்காரர்கள் தாம் விடுவிக்கக் கோரிய இரண்டு இஸ்லாமிய மதகுருமார்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்து விமானத்தைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2004 - உலகின் மிக உயரமான வானளாவியான தாய்வானின் 509 மீட்டர் உயர தாய்ப்பே 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவிடம் இரண்டாம் உலகப் போரின் போது பெற்ற கடன்களை ஐக்கிய இராச்சியம் முழுவதுமாக கட்டி முடித்தது.

### பிறப்புகள்

- 1491 - ஜாக் கார்ட்டியே, பிரெஞ்சு நாடுகாண் பயணி. (இ. 1557)
- 1880 - ஜோர்ஜ் மார்ஷல், நோபல் விருது பெற்ற அமெரிக்கர். (இ. 1959)
- 1929 - ச. வே. சுப்பிரமணியன், தமிழறிஞர்.
- 1937 - அவ்ராம் ஹேர்ஷ்கோ, நோபல் பரிசு பெற்ற இசுரேலியர்.
- 1955 - தாவூத் இப்ராகிம், இந்தியாவில் தேடப்படும் தீவிரவாதி.

### இறப்புகள்

- 1905 - அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர். (பி. 1859)
- 2001 - தொ. மு. சிதம்பர ரகுநாதன், தமிழக எழுத்தாளர். (பி. 1923)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 40 | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 90 | 110 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 180 | 160 | 150 | 200 | 200 |
| தக்காளி | 200 | 100 | 110 | 140 | 130 | 200 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 30 | 60 | 20 | 40 | 60 | 40 | 30 |
| கரட் | 100 | 60 | 90 | 80-140 | 90 | 160 | 120 |
| பூசணி | 60 | 60 | 35 | 50 | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 50 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 40 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 30 | 120 | 80 | 80 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 280 | 200 | 200 | 240 | 240 | 240 | 350 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 70 | 60 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 160 | 150 | 200 | 130 | 120 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 50 | 60 | 60 | 100 | 70 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 200 | 160 | 280 | 140 |
| முருங்கைக்காய் | 450 | — | 300 | 800 | 400 | 400 | — |
| போஞ்சி | 200 | 100 | 110 | 120 | 110 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 | 30 | — | 40 | 25 |
| கீரை-1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 25 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 | 300 | 300 | 400 | 300 |
| தேங்காய்(ஒன்று) | 45 | 50 | 20-40 | 50 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 200 | — | 280 | 180 |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 40 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 100 | 50 | 60 | 60 | 100 | 60 |

# மகிந்த ராஜபக்ஷவால் ஆட்சி மாற்றம் குறித்து தீர்மானிக்க முடியாது

## அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு


**(கொழும்பு)**

**2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படுமா? இல்லையா? என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மாத்திரமே தீர் மானிக்க முடியும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால் ஆட்சி மாற்றம் குறித்து தீர்மானிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை கவிழ்க்க போவதாக முன்னாள் ஜனாதபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமைக்கு பதில்ளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இருக்கும் வாக்கு வங்கி தேசிய தேர்தல் ஒன்றில் வெற்றி பெற போதுமான வாக்கு வங்கியல்ல எனவும் எஸ்.பி. திஸாநாயக்க தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில். கருத்து வெளியிட்டிருந்த மகிந்த ராஜபக்ஷ அடுத்த ஆண்டு அரசாங்கத்தை கவிழ்ப்பதே தனது நோக்கம் என கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)




## பேரீச்சம்பழம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு ஜே/88 முதியோர் சங்க உறுப்பினர்களுக்குநாளை3மணிக்குபுதியகுடியிருப்பு இளையநிலா சனசமூக நிலையத்தில் வைத்து யாழ். கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணியகத்தின்தலைவர் மௌலவி சுபியானால் பேரீச்சம்பழப்பொதி அன்ப ளிப்பாக வழங்கப்படும். (இ

## இரு இலங்கைப் பிரஜைகள் இந்தியாவில் வைத்து கைது

போலி இந்திய கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடுகளு க்கு சட்டவிரோதமான முறையில் செல்வதற்கு முயற்சித்த இலங்கைப் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் கொல்கத்தா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரான்ஸ்நாட்டுக்குச் செல்ல முயற்சித்த நிலையில் விமான நிலைய அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட ஆவண சோதனையின் போது போலிக் கடவுச் சீட்டு வைத்தி ருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் 10 வருடங்களுக்குப் பின்னர் இந்தியாவுக்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

## ஐரோப்பாவில் அழகு ராணியாக பட்டம் வென்ற இலங்கை யுவதி



(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு ஐரோப்பிய இலங்கை அழகு ராணியாக (Miss Sri Lanka in Europe 2016) சபிதா தோமஸ் தெரிவாகியுள்ளார்.

இம்முறை ஐரோப்பாவின இலங்கை அழகு ராணியாக தெரிவாகியுள்ள சபிதா தோமஸ் நீர்கொழும்பில் இருந்து ஐரோப்பா சென்ற பெண்ணாவார்.

தற்போது டென்மார்க்கில் வசிக்கும் அவர் நீர்கொழும்பு கெபுன்கொட பிரதேசத்தை சேர்ந்த மீனவ குடும்பத்தை சேர்ந்தவர்.

சபிதா தோமஸ் தமது குடும்பத்தினருடன் அடிக்கடி இலங்கை வந்து செல்வதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ-3)

# பிரபாகரன் மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் மரியாதையை இல்லாமல் செய்ய முடியாது

## விக்கிரமபாகு கருணாரட்ன எடுத்துரைப்பு



பிரபாகரனே தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர். அவர் மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் மரியாதையை ஒருபோதும் இல்லாமலாக்க முடியாது. அதனடிப்படையிலேயே விஜயகலா மகேஸ்வரனும் பிரபாகரன் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நவசமசமாஜக் கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் பிரதமராகியிருப்பார் என இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரனின் நடவடிக்கைகள் தொடர்பில் பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு இணக்கப்பாடு இல்லாவிட்டாலும் அவர் மீது மரியாதை இருந்து வருகின்றது.

ஏனெனில் பிரபாகரன் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொண்டு வந்த பிரச்சினைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தார்.

அதனால் அவர் மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் மரியாதையை யாராலும் நிறுத்த முடியாது. அத்துடன் தமிழ் மக்கள் அவர் மீது மரியாதை செலுத்துவதால் எந்த பிரச்சினையும் ஏற்படப்போவதுமில்லை.

பிரபாகரனை யாரேனும் புகழ்ந்தாலோ அல்லது உயர்த்தி பேசினாலோ அதற்காக அவர்கள் பிரபாகரனின் வழியை பின்பற்றி செல்கின்றவர்கள் என்று கருத்துக் கொள்ள முடியாது.

பொதுவாக எங்களுக்கு எதிர்க்கருத்துடையவர் மரணித்தால் நாங்கள் அவருடைய கொள்கையை நிராகரித்தாலும் அவர் தொடர்பிலான நல்லெண்ணங்களை வெளிப்படுத்துவது சாதாரண விடயம்.

அதனடிப்படையிலேயே விஜயகலா மகேஸ்வரனும் பிரபாகரன் தொடர்பில் வைத்திருக்கும் மரியாதையிலேயே இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் விஜயகலா மகேஸ்வரன் பிரபாகரன் தொடர்பில் கருத்து தெரிவித்தார் என்பதற்காக அவர் பிரபாகரன் வழியில் செல்லப் போவதாக ஒருபோதும் தெரிவித்திருக்கவில்லை.

அவ்வாறு தெரிவித்திருந்தால் அதனை அரசியல் பிரச்சினையாக தெரிவிக்கலாம். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அத்துடன் இதில் பிரச்சினைப்படுத்துவதற்கும் எந்த விடயமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இராணுவம் உதவி



(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினரால், கச்சாய் மற்றும் நாவற்குழி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு 70 ஆயிரம் ரூபாய் செலவில் இரண்டு குழாய்க்கிணறுகள்அமைக்கும் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் அறிவுறுத்தலின் கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் குடிநீர் பிரச்சினையை நிறைவு செய்யும் வகையில் இலங்கை இராணுவத்தினரால் குழாய்க் கிணறுகள் அமைத்து கொடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# தவறவிட்ட கைப்பை ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மடத்தடி வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தேசிய அடையாள அட்டை, ஆவணங்கள் 5500 ரூபாய் பணம் ஆகியன அடங்கிய தனது கைப்பையை யாழ். போதனா வைத்தியசாலை ஆட்டோ தரிப்பிடத்திற்கு (H-1) முன்பாக இரவு 7 மணியளவில் தவறவிட்டுள்ளார்.

இதனை ஆட்டோ சாரதிகளான பா.றஞ்சித்குமார், பு.ஜான்சன் இருவரும் கண்டெடுத்து முச்சக்கரவண்டி சங்கத்தலைவர் இ.விஜயராசா முன்னிலையில் உரியவரிடம் கையளிக்கப்பட்டது. (இ-3)

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






தனிமைபேரழகு கொண்டதுதான். அந்தச் சமயத்தில் அமைதியை உள்வாங்கி நமக்குள் படரவிடலாம் நல்ல இசையைக் கேட்கலாம் பிடித்தவற்றைப் படிக்கலாம். ஆனால், அதே தனிமை, பசியுள்ள ஓர் ஓநாயாக உங்களைத் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தால்... எப்படி இருக்கும்? எத்தனை நாட்கள்தான் தனிமையின் கரம்பிடித்து நடக்க முடியும்? தனிமை நம்மைச் சிதைக்கும் தானே... உடலின் ஒவ்வொரு செல்லும் துடித்துப் போகும்தானே? தனிமையைக்கூட சகித்துக்கொள்ளலாம். ஆனால், தனிமையிலிருந்து உங்களை மீட்கிறோம் என்று வரும் ரட்சகர்களும் ஏமாற்றினால்... முற்றாக உடைந்து போவோம் தானே? அது தான் நிகழ்ந்தது ஜெயலலிதாவுக்கு...

அவரே சொல்கிறார், "என்னை முன்னேறப் பாதையில் நடத்திச் செல்லவும், எல்லாக் கஷ்ட காலங்களிலும் எனக்குத் துணையாக நின்று ஊக்குவித்து உதவி செய்யவும், என் தாயைப்போல் யாரும் இல்லாவிட்டாலும், உறவினர் என்ற முறையில் ஒரு சிலர் இருந்தார்கள். அவர்களிடம் மனம் ஆறுதல் பெற்று என் கவலையையும் இழப்பையும் மறந்து கலையுலகில் பயணம் செய்ய முயன்றேன். ஆனால், எண்ணியபடி முடியவில்லை. ஏற்கனவே மன நிம்மதியை இழந்திருந்த எனக்கு மற்றொரு பேரிடி. நம்பியிருந்த அந்த உறவினர்கள் என்னை நன்றாக ஏமாற்றி விட்டார்கள். நான் மிகவும் குழம்பிப் போனேன். பகவானே! யாரை நம்புவது... எப்படி நம்புவது?" - இது அவர் 1979ஆம் ஆண்டு பகிர்ந்தது. இந்தச் சமயத்தில் மனதளவில் அவர் உருக்குலைந்துதான் போய் இருந்தார். அதனால்தான், அவரே முற்றாக உடைந்து போன எம்.ஜி.ஆருடனான நட்பைப் புதுப்பித்தார்.

அந்தக் காலகட்டத்தில் அவருக்கு சினிமாவிலும் வாய்ப்புகள் குறைந்து கொண்டே வந்தன. அடுத்து அவர் 'என்ன செய்வதென்று யோசித்தபோதுதான், அவருக்கு விருப்பமான தேர்வாக இருந்தது அரசியல். ஒக்டோபர் 17, 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அ.தி.மு.கவில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் கழித்து ஜூன் 4, 1982ஆம் ஆண்டு, கடலூரில் நடந்த கோலாகலமான விழாவில், ஒரு ரூபாய் உறுப்பினர் கட்டணம் செலுத்தி இணைந்தார். அந்த மாநாட்டில் அவருக்கு யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கட



லூர் வீதியெங்கும் அவர் ஊர்வலமாகத் தேரில் அழைத்துச் செல்லப்பட்டார். ஏற்கனவே, அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல அறிமுகம் உண்டு. அதுவும் இல்லாமல், இப்போது அவரை எம்.ஜி.ஆர். வேறு முதன்மைப்படுத்துகிறார். கேட்கவா வேண்டும்? அ.தி.மு.கவின் அனைத்து முக்கிய தலைவர்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கட்சியில் இணைந்த முதல் நாளே முன்னணித் தலைவர் ஆனார்.

### செய்வீர்களா... செய்வீர்களா?

எம்.ஜி.ஆர். இவருக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தார். ஜெயலலிதாவை சத்துணவுத் திட்டக் குழு உறுப்பினர் ஆக்கினார். தான் கலந்துகொள்ள முடியாத அனைத்துக் கூட்டங்களிலும் இவரைப் பங்கேற்கச் செய்தார். இவருக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. ஆம், அப்போது முதல்வராகப் பதவியில் இருந்த எம்.ஜி.ஆரை, கருணாநிதி பொதுக் கூட்டங்களில் கடுமையாகத் தாக்கிப் பேசிக்கொண்டிருந்தார். அ.தி.மு.கவில் அந்த சமயத்தில் எத்தனையோ மூத்த தலைவர்கள் இருந்தாலும், கூட்டத்தை வசீகரிக்கக்கூடிய அளவுக்கு கரிஷ்மா நிரம்பிய தலைவர்கள் இல்லை. அதனால், ஜெயலலிதாவை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தார். ஜெயலலிதாவும் இந்த வாய்ப்பை மிகச் சரியாக பயன்படுத்திக் கொண்டார். இவர் பேசும் இடங்களில் எல்லாம் கூட்டம் அலைமோதத் தொடங்கியது.

சென்னையில், மயிலை மாங்கொல்லையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், அப்போது நிலவிவந்த குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க தமிழக அரசு எத்தகைய நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டு வருகிறது என்பது குறித்து விரிவாகப் பேசினார். அந்தக் கூட்டத்தை ஒரு வார இதழ் இவ்வாறாகப் பதிவு செய்திருக்கிறது. "குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்கத் தமிழக அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை எடுத்துக்காட்ட,



அவர் எடுத்துப் போட்ட புள்ளி விபரங்களும், கணக்குகளும்... அடேயப்பா...! சத்துணவுத் திட்டக்குழுவின் உறுப்பினரான அவர் கொடுத்த புள்ளிவிபரங்களை, பொலிஸ் துறையைச் சேர்ந்த சிலரே ஜீப்பில் அமர்ந்துகொண்டு குறிப்பு எடுத்துக் கொண்டார்கள்...!" என்று சிலாகித்து எழுதி இருக்கிறது.

தேர்தல் சமயத்தில் அவர் உரையாற்றும் போதெல்லாம்... 'செய்வீர்களா... செய்வீர்களா...' என்று மக்களுடன் கேள்வி கேட்டு பதில் வாங்கி உரையை முடிக்கிறார் அல்லவா...? இந்தப் பாணியைத்தான், அவர் தொடக்க காலத்திலிருந்தே கடைப்பிடித்து வருகிறார். அப்போது நடந்த கூட்டங்களில், "நீங்கள் கருணாநிதியின் தீங்கிழைக்கும் பேச்சை நம்புகிறீர்களா...? அவர் சொல்வதை எல்லாம் ஆமோதிக்கிறீர்களா...?" என்று மக்கள் முன் கேள்வியை வைத்துப் பேசி இருக்கிறார். இந்தப் பாணி அவருக்கு நன்கு கைகொடுத்திருக்கிறது.

நடிகை என்ற பிம்பத்தைத் தாண்டி, ஓர் அரசியல் தலைவராக மக்கள் மனதில் பதியத்தொடங்கினார். கொள்கை பரப்புச் செயலாளர், ராஜ்ய சபா எம்.பி. என அவருடைய வளர்ச்சி நாளுக்கு நாள் மேலே போகத் தொடங்கியது. கட்சியின் இரண்டாம்கட்டத் தலைவர்களுக்கும் இவரைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று புரியத் தொடங்கியது. எப்படியாவது அவரை வீழ்த்த வேண்டும் என்று காய் நகர்த்தியபோதுதான், நாம் முந்தைய அத்தியாயத்தில் பார்த்த அந்த டில்லி சம்பவம் நடக்கிறது. ஜெயலலிதாவைப் பற்றி பக்கம் பக்கமாக புகார் வாசிக்கத் தொடங்குகிறார்கள். மீண்டும் எம்.ஜி.ஆருக்கும் - ஜெயலலிதாவுக்கும் இடையே முரண்கள் முளைக்கத் தொடங்குகின்றன.

இதேகாலகட்டத்தில், அதாவது ஒக்டோபர் 5, 1984ஆம் திகதி, எம்.ஜி.ஆருக்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறது. அப்பலோவில் அனுமதிக்கப்படுகிறார்.

### அனுமதி மறுக்கப்பட்ட ஜெ.!

ஜெயலலிதாவையும், எம்.ஜி.ஆரையும் பிரிக்க வேண்டும் என்று நினைத்த தலைவர்களுக்கு இந்தச் சம்பவம் வசதியாக அமைகிறது. ஜெயலலிதா அப்பலோவுக்குள் வர அனுமதி மறுக்கிறார்கள். அவர் அப்பலோவுக்குள் வந்தால், அவரைத் தாக்கவும் திட்டமிடுகிறார்கள். அப்போது அப்பலோ தலைமை வைத்தியராக இருந்த பி.சி.ரெட்டியிடம், "ப்ளீஸ்... டாக்டர். அவர் தூங்கும் போதாவது ஓரிரு நிமிடங்கள் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்று மன்றாடியதாக அவரே பின்னொரு பேட்டியில் பகிர்ந்திருக்கிறார்.

இதற்கு மத்தியில் ஒக்டோபர் 16ஆம் திகதி, இந்திரா காந்தி சென்னை வந்து மருத்துவமனையில் எம்.ஜி.ஆரைப் பார்த்துச் செல்கிறார். அடுத்த நாள் ஒக்டோபர் 17ஆம் திகதி. இந்திரா காந்திக்கு ஒரு கடிதத்தை எழுதுகிறார் ஜெயலலிதா. அதில், "அம்மா! நீங்கள் சென்னைக்கு வருகிறீர்கள் என்று ஒரு வார்த்தை எனக்குச் சொல்லி இருந்தால், நான் விமான நிலையத்துக்கே ஓடோடி வந்திருப்பேனே! என்னிடம் யாருமே சொல்லவில்லையே! என் தலைவரைப் பார்க்க நீங்கள்தான் அம்மா ஒரு வழி செய்ய வேண்டும். நான் வேறு யார் உதவியை நாட முடியும்...? என் அன்னையாகிய உங்களைத் தவிர. இந்தச் சோதனையான நேரத்தில் எனக்கு உதவிட வேறு யாருமில்லை அம்மா...!" என்று எழுதுகிறார். இரண்டு நாட்கள் கழித்து டில்லியிலிருந்து காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஆர்.கே.தவானும் ஜி.பார்த்தசாரதியும் ஜெயலலிதாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் கூறுகிறார்கள்.

"அம்மா (இந்திரா காந்தி) சென்னைக்கு வருவது குறித்து திடீரென முடிவு எடுக்கப்பட்டதால் யாருக்குமே தெரிவிக்கவில்லை. உங்களுக்குச் சொல்லவில்லையே என்று தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று அம்மா சொல்லச் சொன்னார்கள். முதல்வரை (எம்.ஜி.ஆர்.) பார்ப்பது குறித்து டாக்டர் சொல்படி நடந்துகொள்வது நல்லதென்று அம்மா சொன்னார்கள்." என்று தவானும் பார்த்தசாரதியும் கூறியதாக ஜெயலலிதா ஒரு கட்டுரையில் எழுதி இருக்கிறார்.

சில தினங்களில், எம்.ஜி.ஆர். அமெரிக்கா புரூக்லின் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

(தொடரும்)

இறந்து போனவனின் செருப்புக்குக் காத்திருப்பவன் வெறுங்கால்களுடனே நடக்க வேண்டி வரும்.
-டெனிஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## சூர்ப்பனகையின் சூளுரையும் மகிந்த ராஜபக்ஷவின் சபதமும்

இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன். மண்டோதரி எனும் நாகர் குலத்து மகளை மனைவியாகப் பெற்றவன். உயிரையும் கொடுக்கக்கூடிய கும்பகர்ணனை சகோதரனாகக் கிடைக்கப் பெற்றவன். இவ்வாறு எல்லா வளமும் கிடைக்கப் பெற்ற இராவணன் மிகச் சிறந்த தலைவன். அறம் தெரிந்தவன், தர்மம் புரியும் மனம் கொண்டவன் இருந்தும் அவனே! சீதையைக் கடத்தி வந்து தன்னை மணம் கொள்ளுமாறு வற்புறுத்தினான்.

ஏன்? இப்படி அவன் செய்ய வேண்டும் என்று யாரும் கேட்பதில்லை. ஏதோ இராவணன் இயல்பில் கெட்டவன் போலவும் அவன் விரச மனம் கொண்ட மன்னன் போலவுமே நாம் நினைந்து கொள்கிறோம்.

ஆனால்; உண்மை அதுவன்று. முப்பொழுதும் சிவத்திரு நாமம் சொல்லி சிவபூசை செய்யும் சிவபக்தன் அவன். திருநீற்றை தன்மேனியில் அணிந்து இராவணன் மேலது நீறு என்று யாபேரும் போற்றும் படியாக நடந்தவன்.

என் செய்வது! அவன் சகோதரியாக சூர்ப்பனகை இருந்தாள். விதி வசத்தால் இராமனைக் கண்டாள். இராமன் மீது தாபம் கொண்டாள். இதன் விளைவு சூர்ப்பனகையின் மூக்கை இராமபிரான் தம்பி இலக்குவனன் வெட்டி விட, அந்தோ! இராவணன் அழிவதற்கு நாள் தீர்மானிக்கப்படுகிறது.

தன் மூக்கறுத்த இலக்குவனையும் தன் விருப்பத்தை நிறைவேற்றாத இராமனையும் அழிக்க திடசங்கற்பம் கொண்டாள்.

வழி யாது? கற்புடைத் தேவி சீதையை-அவள் அழகை இராவணனுக்கு எடுத்துரைத்து அவளைக் கவரச்செய்வதன் மூலம் இராமகுலத்தை அழிக்க முடியும் என்று கருதினாள்.

மூக்கறுபட்ட கணத்தில் இந்த முடிவை எடுத்த சூர்ப்பனகை, மலை எடுத்த அண்ணாவோ... அண்ணாவோ... என்று கூக்குரலிட்டுச் செல்கிறாள்.

இராவணனை உசுப்பேற்றுவதற்காக அப்படியொரு உபாயம் சூர்ப்பனகையால் மேற்கொள்ளப்படுகிறது. சூர்ப்பனகையின் அவலக் கோஷம், மலையெடுத்த அண்ணாவோ என்று அவள் எழுப்பிய வீராவேஷம் என எல்லாமும் சேர்ந்து இராவணனை மறம் படைத்தவனாக ஆக்கிவிட, சீதை கடத்தப்படுகிறாள், இலங்காபுரி எரிகிறது; முடிவு இராவண சேனை மாள்கிறது.

இராம சேனையை அழிக்க நினைத்து தீட்டிய திட்டம் மறுதலையாய் நடந்து முடிகிறது.

ஆக, சபதங்களும் சூளுரைகளுமே இவ்வுலகில் யுத்தத்தையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளன என்பதற்கு சூர்ப்பனகை நல்லதொரு சாட்சி.

இது ஒரு புறம் இருக்க, இப்போது இலங்காபுரியில் இன்னொரு சபதம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆம் 2017ஆம் ஆண்டில் ஜனாதிபதி மைத்திரியின் நல்லாட்சியைக் கவிழ்ப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபதம் செய்துள்ளார்.

சூர்ப்பனகையில் சூளுரை எடுத்தவரையே அழித்தது, மகிந்தவின் சபதம் எதைச் செய்யும் என்பதை காலம்தான் சொல்ல வேண்டும்.

இருந்தும் நல்லாட்சியில் நடப்பவை இந்த நாட்டில் இன சமத்துவத்தை நீதியை நியாயத்தை நிலை நிறுத்துவதாக தெரியவில்லை. இத்தகைய நிலைமை மகிந்தவின் சபதத்தை நிறைவேற்றி விடுமோ என்று ஐயுறவு கொள்ளச் செய்கிறது.

# 2017மார்ச் மாதத்திற்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படலாம்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை அடுத்த வருடம் மார்ச் மாத காலப் பகுதிக்குள் நிறைவு செய்ய முடியும் என, அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது வரை 4600 ஏக்கர் நிலப்பரப்புகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், வலி. வடக்கில் 31 நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள சுமார் ஆயிரம் குடும்பங்கள் வரை இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளதாக அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

இவர்களுக்கு மீள் குடியேற்ற காணிகளை பெற்றுக் கொடுப்பது குறித்து தற்போது வரை பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# போதைப்பொருள் பாவனையை ஒழிக்க பல்கலைக்கழக மாணவர்களிடம் உதவி

போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்காக பல்கலைக்கழக மாணவர்களின் உதவி கோரப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் முதற்கட்டமாக கம்பஹா மாவட்ட பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

மேலும், 3 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு கம்பஹா மாவட்டச் செயலகத்தில் தலைமைத்துவப் பயிற்சியின் கீழ் இந்த விடயம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எதிர்வரும் கல்வியாண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்பு விடயங்கள் தொடர்பாக விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதியின் விசேட படையணி செயலகம் தெரிவித்துள்ளது.(இ-3)

# தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாத காரணத்தினால் எல்லை நிர்ணய அறிக்கையை ஏற்கவில்லையாம்

தமிழ் மொழிபெயர்ப்புடன் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கையை பதில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன ஏற்கவில்லை என சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கையை பூர்த்தி செய்து இறுதி அறிக்கை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் தமிழ்மொழி பெயர்ப்பு உள்ளடக்கப்படாத காரணத்தினால் அதனை ஏற்றுக் கொள்ள அமைச்சர் மறுத்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

எல்லைநிர்ணயஆணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் உள்ளிட்ட பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்துள்ளதாகவும் தமிழ் மொழி பெயர்ப்பு இன்றி அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு அதனை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு முடியாத நிலைமை காணப்படுவதாகவும் முழுமைப்படுத்தித் தருமாறு ஆணைக்குழுவிடம் கோரியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அறிக்கை முழுமையாக்கப்பட்ட போதிலும் வடமாகாணம் குறித்த தமிழ் மொழி பெயர்ப்பும் வடமேல் மாகாணத்தின் சில பகுதிகள் குறித்த மொழி பெயர்ப்பும் எஞ்சியிருந்த காரணத்தினால் அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார். (இ-3)

# ஒரு விநாடி தாமதமாக பிறக்கிறது புத்தாண்டு

(கொழும்பு)

பூமியின் ஒருநாள் சுழற்சியை அடிப்படை யாகக் கொண்டு நேரம் கணக்கிடப்படுகிறது. இது வானியல் நேரம் என்று அழைக்கப்படுகிறது.

இதேபோல உலகம் முழுவதும் 400 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அணு கடிகாரம் மூலமும் நேரம் கணக்கிடப்படுகிறது. இது மிகவும் துல்லியமானது. தற்போது அணு கடிகாரத்தை பின்பற்றியே உலகின் நேரம் நிர்ணயிக்கப்படுகிறது.

பொதுவாக பூமி ஒரே வேகத்தில் சுற்றுவதில்லை. நிலவின் ஈர்ப்பு விசை, நில நடுக்கம் உள்ளிட்ட பல் வேறு காரணங்களால் சில நேரங்களில் வேக மாகவும் சில நேரங்களில் மெதுவாகவும் சுற்றுகிறது.

இதனால் பூமியின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட வானியல் நேரத்துக்கும் அணு கடிகாரத்தின் நேரத் துக்கும் நூலிழை வேறுபாடு இருந்து கொண்டேயிருக் கிறது.

அதன்படி 500 முதல் 750 நாட்கள் கால அளவில் வானியல் நேரத்துக்கும் அணு கடிகார நேரத்துக்கும் இடையே ஒரு விநாடி வேறுபாடு ஏற்படுகிறது. இதை ஈடுசெய்ய உலகின் அணு கடிகாரங்களில் அவ்வப்போது ஒரு விநாடி கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது. இது லீப் விநாடி என்று அழைக்கப்படுகிறது. ஜூன் 30 அல்லது டிசெம்பர் 31 ஆம் திகதிகளில் இந்த லீப் விநாடி சேர்க்கப்படும்.

கடந்த 1972ஆம் ஆண்டில் லீப் விநாடி முதல் முறையாக அறிமுகமானது. அன்று முதல் இதுவரை 26 முறை லீப் விநாடி சேர்க்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில் வரும் 31ஆம் திகதி லீப் விநாடி சேர்க்கப்படுகிறது. எனவே வரும் 2017 புத்தாண்டு பிறக்க கூடுதலாக ஒரு விநாடி நேரமாகும் என்று சர்வதேச பூமி சுழற்சி அமைப்பு அறிவித்துள்ளது.

லீப் விநாடி குழப்பத்தை தவிர்க்க கூகுள் நிறுவனம் சிறப்பு ஏற்பாட்டை செய்துள்ளது. அதன்படி கூகுளின் சர்வர் கடிகாரம் ஒரு விநாடியை ஈடுகட்ட 20 மணி நேரம் சற்று மெதுவாகச் சுற்றும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.(இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அறிவு முறையில் அல்லாமல் சந்நியாசி அணியும் காவியுடையினால் இந்தியாவின் நிலை உயர்த்தப்படும். செல்வச் செருக்கினால் அல்லாமல் சந்நியாசியின் பிச்சைப்பாத்திரத்தின் ஆற்றலால் இந்தியாவின் நிலை உயர்வடையும்.

❖ எதிர்கால இந்தியா நமது உழைப்பைப் பொறுத்துத் தான் அமைந்திருக்கிறது. பாரதமாதா தயாராகக் காத்திருக்கிறாள். அவள் உறங்கிக் கொண்டு மட்டும்தான் இருக்கிறாள்.

❖ எனது சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. முதலிலேயே பெரிய திட்டங்களைப் போட்டுக் கொண்டு புறப்பட வேண்டாம். நிதானமாக ஆரம்பியுங்கள். ஆழம் பார்த்துக்கொண்டே மென்மேலும் நிதானமாக முன்னேறுங்கள். எழுந்திருங்கள், எழுந்திருங்கள்; நீண்ட இரவு கழிந்து விட்டது. இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலம் என்ற பொழுது புலர்ந்து வருகிறது. அதனுடைய உத்வேகத்தைத் தடுத்து நிறுத்த எதனாலும் ஆகாது.

# பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி





அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 443 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்பில் இரட்டை சதத்தை பூர்த்திசெய்த அஷார் அலி ஆட்டமிழக்காமல் 205 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஸ்மித் மற்றும் வோர்னரின் சிறந்த துடுப்பாட்டத்தின் உதவியுடன், 624 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஸ்மித் 164 ஓட்டங்களையும், வோர்னர் 144 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில் 181 ஓட்டங்கள் பின்னடைவிலிருந்து ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 163 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்து தோல்வியடைந்துள்ளது.

பாகிஸ்தான் அணிசார்பில் சப்ராஸ் அஹமட் மற்றும் அஷார் அலி தலா 43 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் மிச்சல் ஸ்டார்க் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் ஸ்மித் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்


## ஹொக்கி சான்றிதழுக்கு பதிவு செய்க

இலங்கைபாடசாலைகள்ஹொக்கி சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ஆசிரியர்கள், பயிற்றுநர்களுக்கான பயிற்சி சான்றிதழும் நடுவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

ஆர்வம் உள்ள ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தமது முதல் நியமன திகதி ஆண்டுடன் பெயர், பாடசாலையை பதிவு செய்து அனுப்பும் படி இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் உபதலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட வேண்டிய முகவரி anuruddhabndr@yahoo.com. 071 844 4296 தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம். மேலதிக தொடர்வுக்கு யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிசங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (க)

## ஆஸி துணை பயிற்சியாளராக ஜேசன் கில்லெஸ்பி நியமனம்



இலங்கை தொடருக்கான அவுஸ்திரேலிய அணியின் துணை பயிற்சியாளராக ஜேசன் கில்லெஸ்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கிறது. டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முந்தைய நாள் வரை அவுஸ்திரேலியா இருபது-20 கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கிறது.

இருபது-20 தொடரை முடித்துக்கொண்டு இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்வது சாத்தியமில்லை. இதனால் அவுஸ்திரேலிய அணியின் தலைமை பயிற்சியாளர் டேரன் லீமேன் உடன் முதன்மை அணி இந்தியாவிற்கு வந்துவிடும்.

இலங்கை அணிக்கெதிரான அவுஸ்திரேலிய அணியின் தலைமை பயிற்சியாளராக ஜஸ்டின் லாங்கர் இருப்பார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் கில்லெஸ்பி துணை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியாவில் பிக்பாஷ் இருபது-20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பெர்த் ஸ்கார்ச்சேர்ஸ் அணியின் பயிற்சியாளராக லாங்கரும், அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணியின் தலைவராக கில்லெஸ்பியும் செயற்பட்டு வருகின்றனர். (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

சுன்னாகம் சிவன் கழகத்தி னால் நடாத்தப்படும் மென்பந்துச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 8 பேர் 5 பந்துப் பரிமாற்றம் கொண்ட போட்டியா னது இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் மைதானத்தில் நடை பெறவுள்ளது

போட்டி கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படுவதோடு 28 வயதுக்குட்பட்டோரே மேற்படி போட்டியில் பங்கு பற்ற முடியும்.

தொடர்புக்கு - 0773093483, 0766852489

★★★★★★★★

அல்வாய் யூத் விளையாட்டுக்கழகம் நடத்தவிருக்கும் அணிக்கு 9 பேர் கொண்ட 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று 31 மற்றும் நாளை முதலாம் திகதிகளில் அல்வாய் நண்பர்கள் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளை விரைந்து முடிக்க வேண்டி இருப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களை பதிவு செய்ய ஒழுங்கமைப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர். எனவே விளையாட்டு கழகங்களை விரைந்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பரிசு விபரங்கள் Winners -20,000 பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணம் Runners UP -10000 பணப்பரிசுடன் வெற்றிக் கிண்ணம், ஒவ்வொரு போட்டிக்கும் ஆட்டநாயகன் விருதும் சுற்றுத்தொடரில் தொடர் ஆட்டநாயகன், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர் விருதும் வழங்கப்படும்.தொடர்பிலக்கம் 076 886 4979, 077 236 7535. (க)

## கொம்மாந்தறை இளைஞர் வி.கழக மின்னொளியிலான கிரிக்கெட் போட்டி

கொம்மாந்தறை இளைஞர்கள் வி.கழகம் வடமாகாண ரீதியில் நடத்தி வருகின்ற மென்பந்தாட்டத் தொடரில் 8 ஓவர்கள் கொண்ட போட்டித் தொடரின் இறுதிப்போட்டிக்கு மல்லாகம் ஸ்ரீ முருகன் வி.கழகமும் கொக்குவில் AB விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளது.

மற்றும் 5 ஓவர்கள் கொண்ட தொடருக்கு கொக்குவில் AB மற்றும் வதிரி ஸ்ரீமுருகன் ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருக்கின்றன.

இந்த இறுதிப்போட்டிகள் அனைத்தும் இன்று 31 ஆம் திகதி சனிக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சேனாதிராஜாவும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

# பொது பல சேனா...

கலந்துரையாடல்மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஊடக மாநாட்டில் அமைச்சர் டிலான் பெரேரா பற்றி அமைச்சர்கள் மனோ கணேசன், பழனி திகாம்பரம் ஆகியோர் தெரிவித்த கருத்துகளுக்கு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்த பதில் கருத்து பற்றி அமைச்சர் மனோ கணேசன் கூறுகையில்,

நள்ளிரவில் நான் என்ன செய்கிறேன் யாருடன் உரையாடுகிறேன் என்பவை பற்றியெல்லாம் நண்பர் டிலான் தெரிந்து வைத்திருப்பதாக சொல்வது சுவாரசியமானது. நள்ளிரவில் என்னை தேடுவதை நிறுத்திவிட்டு நண்பர் டிலான் நமது நல்லாட்சி அரசை பாதுகாக்கும் கடமையை கரிசனையுடன் ஆற்ற வேண்டும்.

"டீல்" பற்றி தொடர்ச்சியாக நண்பர் டிலான தான் பேசி வருகிறார். பசில் ராஜபக்சவுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை இருக்குமானால் அதை ஆவணங்களுடன் வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு டிலானுக்குதான் இருக்கிறது. அவர் இந்த பசில்-ஐ.தே.க இரகசிய தொடர்பு பற்றி பேசிக் கொண்டுமறைமுகமாக இந்த அரசுக்குள் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முயல்கிறார். இதைத்தான் பொது பல சேனா மற்றும் பொது எதிரணி எம்.பிக்கள் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றோரும் செய்கிறார்கள். ஆகவே தான் இந்த சந்தேகம் எமக்கு ஏற்பட்டது. அதைத்தான் நான் சொன்னேன்.

தமிழ் முற்போக்கு கூட்டணியை பொறுத்தவரையில் ஐ.தே.க ஆட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சி என்பவைகளை விட தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதுவே முக்கியமானது. ஆகவே அதற்காக புதிய அரசியலமைப்பு வரும்வரையிலாவது தேசிய அரசு இருக்க வேண்டும். அதன்பிறகு வேண்டுமானால்போய் தனித்தனி அரசுகளை அமையுங்கள்.

நண்பர் டிலான் அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் என்னுடன் இருக்கிறார். ஆகவே அங்கே என்ன நடக்கிறது என்பது பற்றி அவர் சிங்கள மக்களுக்கு எடுத்து சொல்லி இந்த அரசை காப்பாற்ற வேண்டும். அதை விடுத்து அவரும்பொதுபல சேனா மற்றும் பொது எதிரணி எம்.பிக்கள் உதய கம்மன்பில, விமல வீரவன்ச ஆகியோரை போல் இந்த அரசை வீழ்த்த நினைத்தால்எவருக்கும் அவரைப் பற்றி சந்தேகம் வரத்தானே செய்யும். ஆகவே தான் "டீல் டிலான்" இல்லை என்று நிரூபிக்க வேண்டிய நிலையில் அவர்தான் இருக்கிறார் என மனோ கணேசன் கருத்து தெரிவித்தார். (செ-11)

# மகா நாயக்கர்...

காக மகாநாயக்க தேரர்கள் விடுத்த அழைப்பை ஏற்றே இந்த சந்திப்பை பிரதமர் மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் மகாநாயக்க தேரர்கள் அரசியலமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்ற அவர்களின் யோசனையை பிரதமரிடம் முன்வைத்தனர். அந்த 5 அம்ச யோசனைகளில் பிரதானமானது ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட வேண்டும் என்பதாகும்.

தமிழர் தரப்பு சமஷ்டியைக் கோருகின்ற போதிலும், தெற்கு அதை எதிர்த்து ஒற்றையாட்சியின் கீழே தீர்வு அமைய வேண்டும் என்று கூறி வருகின்றது. அதுபோக, தமிழீழம் உருவாகும் வகையிலான ஒரு தீர்வை பிரதமர் தமிழருக்கு வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்ற பிரசாரமும் தெற்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பிரதமரிடம் தெளிவைப் பெறுவதற்காகவே மேற்படிச் சந்திப்பு பிரதமருக்கும் மகாநாயக்க தேரர்களுக்கும் இடையில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் பிரதமருக்கு வழங்கப்பட்ட 5 அம்ச யோசனைகளை அடிப்படையாக வைத்தே புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் என்ற முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வந்துள்ளது என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-11)

# இந்திய மீனவர்கள்...

ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கிரியங்கள்ளிய நீர்த்தேக்கத்தை மையமாகக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு தேவையான வள்ளங்கள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் வழங்கல் மற்றும் 10 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீனவ சனசமூக நிலையம் அங்குரார்ப்பணம் செய்யும் வைபவத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறலே பிரதான சவாலாக உள்ளது.

இதற்கு இறுதித் தீர்வு காண்பதற்காக இராஜதந்திர மட்டத்தில் பேச்சு நடத்தி வருகின்றோம். எனினும் அத்துமீறிய மீனவர்கள் மீன்பிடியிற்கு பயன்படுத்திய உபகரணங்களை திருப்பி கொடுக்கப் போவதில்லை.

இரு தரப்பிற்கும் இடையிலான இராஜதந்திர மட்டத்திலான மற்றொரு பேச்சுவார்த்தை நாளை மறுதினம் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகிறது. தற்பொழுது 122 இழுவைப்படகுகளுடன், 140 நாட்டுப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றுடன் கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் யாவும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. அரசு உடமையாக்கப்பட்ட படகுகளையோ உபகரணங்களையோ விடுவிக்க மாட்டோம். எனினும் கைது செய்யப்பட்டுள்ள சகல இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபரின் ஆலோசனைப் பிரகாரம் விடுதலை செய்ய அரசாங்கம் என்ற ரீதியில் முடிவு செய்துள்ளோம்.

இரு நாடுகளுக்குமிடையிலான நற்புறவை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடற்தொழில் அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

# ஒரு நாடாக நாம்...

வரும் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள, உலகின் மிகப்பெரிய நத்தார் மரத்தை நேற்றுமுன்தினம் ஆறாம் நாளாகவும் மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த கருத்தினை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியை கடந்துச் செல்கின்றோம். இன்னும் ஒரு சில நாட்களில் புத்தாண்டு மலரவுள்ளது. அது மிகவும் எதிர்பார்ப்புள்ள ஆண்டாகும். எதிர்வரும் ஆண்டில் இருள் சூழ்ந்த கடந்த காலத்தை பின்தள்ளி வைத்துவிட்டு ஒரு நாடாக ஒன்றிணைந்து சௌபாக்கியத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எங்களுடைய பல மக்கள் ஏழ்மையால் தவிக்கின்றார்கள். நாம் இந்நிலைக்கு இடங்கொடுக்கக்கூடாது. எம் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். எம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அதன் மூலம் அவர்கள் வாழ்வதற்கான சூழலொன்றை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இக்குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டும். இன்னும் ஒரு சில நாட்களில் புத்தாண்டு மலரவுள்ளது. அது மிகவும் எதிர்பார்ப்புள்ள ஆண்டாகும்.

உலகின் மிகப் பெரிய நத்தார் மரம் எம்முடைய இச்சிறு தேசத்தை உலகிற்கு அறியப்படுத்துவதற்கு பெரிதும் துணைபுரிந்துள்ளது. இலங்கை மக்கள் அனைத்து மத கொண்டாட்டங்களையும் பொதுவாக கொண்டாடுவார்கள் என்பதை நாம் அறிவோம். வெசாக் கொண்டாட்டம் சிங்கள தமிழ் புத்தாண்டு முஸ்லிம்களின் திருநாள்கள் என அனைத்து திருநாள்களையும் இலங்கையர்கள் கொண்டாடுகின்றார்கள்.

இச்செயற்பாட்டின் மூலம் எம் மக்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமை வெளிப்படுகின்றது. எங்களுடைய சமய கலாசார மொழியின் தனித்தன்மையை நிலைநாட்டியவாறு ஒரு இனமாக வாழ்வதற்கான தேவை இதன் மூலம் வெளிப்படுகின்றது என சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

# மகிந்தவின்...

றும் போதே அவர் இதனை கூறியுள் ளார். 2020ஆம் ஆண்டு வரை பொதுத் தேர்தல் என ஒன்றும் நடக்காது என்பதால், தற்போதுள்ள அரசாங்க த்தை கவிழ்க்க முடியாது.

ஆகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவாலும் 2017ஆம் ஆண்டில் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. ஆனால், தற்போதுள்ள ஜனாதிபதியால் பிரதமர் மற்றும் அமைச்சரவையில் மாற்றங்களை செய்வது குறித்து நினைத்து பார்க்க முடியும் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

# கருணைக்காலம்...

வாகனங்களை பதிவு செய்து கொள் வதற்காக வாகன உரிமையாளர் களை ஊக்கப்படுத்தும் நோக்கி லேயே மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் குறித்த கருணைக் காலம் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது நிலவும் சட்டங்களுக்கு அமைய வாகனம் பரிமாற்றப் பட்டு 14 நாட்களுக்குள் அது புதிய உரிமையாளரின் பெயருக்கு பதிவு செய்யப்படவேண்டும்.

எவ்வாறாயினும் நேற்றுடன் குறித்த கருணைக் காலம் நிறைவடைந்த நிலையில் தாமதமாகி பதிவினை மேற்கொள்ள அபராதத் தொகை அறவிடப்படும்என மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களம்மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

# பொறுப்புக் கூறுங்கள்...

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக் கூற வலியுறுத்தி வடக்குக் கிழக்கில் நேற்று வெள்ளிக்கிழமை போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக காத்திரமான முடிவை அறிவிக்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

படையினரிடம் கையளிக்கப்பட்டு மற்றும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி கண்டறியும் சங்கம் வவுனியாவில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வவுனியா கச்சேரிக்கு முன்பாக உள்ள மாவீரன் பண்டாரவன்னியனின் சிலைக்கு முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

எங்கே.. எங்கே.. எங்கள் பிள்ளைகள் எங்கே?, அவர்கள் நலமுடன் இருக்கின்றார்களா? வீடு திரும்புவார்களா?, மைத்திரி ரணில் கூட்டின் பங்காளிகளாக மாறியதன் பலன் என்ன? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தங்களுக்கு காத்திரமான தீர்வு கிடைக்காவிட்டால் பொங்கலுக்கு பின்னர் ஜனவரி 21ஆம் திகதி தொடக்கம் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றிணைந்து நேற்று காலை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தியுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், படுகொலைக்கும் வன்முறைக்கும் உள்ளானோரின் குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச நீதிப் பொறிமுறையே அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் ஐ.நா இணைப் பங்காளியாக வேண்டும் எனவும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக அரசு உடன் பொறுப்பு கூற வேண்டும். தவறினால் வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் குதிக்கப் போவதாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முந்தைய அரசைப் போலவே நல்லாட்சி அரசும் இந்த விடயத்தில் தங்களை ஏமாற்றி வருவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

உள்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடமும் மாதங்கள் பலவும் கடந்துள்ள போதிலும் வலிந்து காணாமல் போன தங்கள் உறவுகள் தொடர்பாக இதுவரை உண்மை நிலை கண்டறியப்படவில்லை எனவும்,

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு நடந்தது என்ன? என்ற உண்மை நிலை கண்டறிப்படும் வரை மரண சான்றிதழோ அல்லது இல்லாமைக்கான சான்றிதழோ தாங்கள் பெறப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கான மனுக்களும் ஏற்பாட்டாளர்களினால் ஆளுநர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கில், நிகழ்வு முடிந்ததும் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனின் படத்தை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தீயிட்டுக் கொழுத்தினர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா. சம்பந்தனின் உருவப்படம் உண்ணாவிரதம் இருந்தவர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து அவர்களை விடுதலை செய்வதற்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் அரசாங்கத்திடமிருந்து அதற்கான பதில் கிடைத்திருக்கும். அவ்வாறு அவர் செய்யத் தவறிய காரணத்தினாலேயே அவருடைய உருவப்படத்திற்கு எரியூட்டப்பட்டது என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர். (செ-11)

# சுசந்திகாவுக்கு சிறப்புசிகிச்சை



(கொழும்பு)

சுசந்திகா ஜெயசிங்கவின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாக காதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதை கூறியுள்ளார்.

நாட்டுக்கு சிறப்பினைத் தேடித் தந்த ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்கவுக்கு சிறப்பு நிபுணத் துவ வைத்திய குழுவினரால் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் இதன் போது அவர் தெரிவித்தார்.

மேலும் தியத்தலாவை வைத்தியசாலையிலிருந்து உலங்குவானூர்தி மூலம் தேசிய வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் சுசந்திகா ஜெயசிங்க அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பாடசாலைகளுக்கு அதிபர் நியமனம்

அதிபர் தரம் IIIஐ சேர்ந்தவர்களை பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்களாக நியமிக்கும் பொருட்டு அவர்களுக்கு உரிய நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது.

இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ம் திகதி பாடசாலை ஆரம்பிக்கும் போது தமது கடமைகளை பொறுப்பேற்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

**NAC- மானிப்பாய் கலைப்பிரிவு**

**A/L - 2019**

தமிழ் - சந்திரலிங்கம்
வரலாறு - பத்மன்
புவியியல் - பாபு
ஊடகம் - கஜீதரன்
அரசியல் - N.பாபு
ICT - நஜன்
இந்துநாக. - N.T.தரன்
ஆரம்பம் :- 01.01.2017 (Sun 3 p.m)

**தேவை**

மிலேனியம் விருந்தினர் விடுதிக்கு Driver, waiter ஆகிய பதவி நிலைகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.
தொடர்பு: 0212225876, 0776016310

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS


## சம்பந்தனின்..

னியாவில் எரிக்கப்பட்டது.

வவுனியா பண்டாரவன்னியன் உரு சிலைக்கு முன்பாக கையளிக்கப்பட்டும் கட தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி கண்டறியும் சங்கத்தால் அடையாள உண ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்ட

இந்த போராட்டத்தின் இறுதியிலே சம் ந்தனின் உருவப்படம் எரிக்கப்பட்டது. இத போது எரியூட்டப்பட்ட உருவப்படத்தை சூ கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உற கள் கூட்டமாக நின்று எதிர்க்கட்சி தலை வருக்கு எதிரான கோஷங்களையு எழுப்பியிருந்தமை காணக்கூடியதா இருந்தது. (செ-11)


**கணக்கீடு**
AP.பகீரதன் B.B.A(FMSpl)
A/L 2019
**ECONOMICS HALL**
நாவலர் வீதி, யாழ்.நகர்
(புகையிரத கடவை அருகில்)
ஆரம்பம் ஜனவரி 01
ஞாயிறு காலை 9 மணி

**ECONOMICS HALL**
நாவலர் வீதி, யாழ்நகர்
(புகையிரத கடவை அருகில்)
A/L 2019
வர்த்தகப் பிரிவு
Eco-R.தர்ஷன்
Acc-AP.பகீரதன்
B.St-S.யசோதரன்
Ict-R.நஜன்
ஆரம்பம்:-
ஜனவரி 01 ஞாயிறு
காலை 9 மணி
குறிப்பு:-
ஜனவரி 31 வரை
அனுமதிக்கட்டணம் இலவசம்

**ECONOMICS HALL**
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரத கடவை அருகில்)
A/L 2019
ஜனவரி 01 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
குறிப்பு:- ● ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்
● தனித்துவமான ஆசிரியர் குழுவின் அர்பணிப்பான வழிகாட்டல்
(C-7008)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

| VAI | IBS |
|---|---|
| பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில் |
| ஆரம்பம்:- ஜனவரி 02 திங்கள் மாலை 5 மணி | ஆரம்பம்:- ஜனவரி 07 சனிக்கிழமை மாலை 4 மணி |

■ அனுமதிக் கட்டணம் இல்லை
■ மாணவர் மீது தனிப்பட்ட கவனம்
தொடர்புகளுக்கு:-0774598499

**NAC- மானிப்பாய் A/L - 2019**
வர்த்தகப்பிரிவு
Eco. - ஜெயக்குமார்
Acc. - ஷன்சன்
Busi. - பிரதீபன்
ஆரம்பம் :- 01.01.2017 (Sun 3 p.m)
Cont: 0776947162

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
100% SATISFACTION GUARANTEED
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவு நம்பிக்கையாகவும் பொதிகள் மற்று கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்தி
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலா


**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com
(C-679

**YAARL FITNESS** NOW OPEN IN JAFFNA TOWN
ESPN BUILDING, NO. 12 B/1 (3RD FLOOR), STANLY ROAD, JAFFNA
YAARL FITNESS -LEVELUP-



● முற்றிலும் குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சிகூடம்
● நியாயமான கட்டணத்துடன் தரமான உடற்பயிற்சிகள் மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள்
● ஆண் பெண் இருபாலருக்குமான உடற்பயிற்சிகள் மற்றும் பயிற்சிகளுக்கான ஒத்துழைப்பு
● தினமும் காலை 5மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்

2017 புது வருடத்தை முன்னிட்டு ➤ இருவர் ஒன்றாக அங்கத்துவம் பெறும் போது
➤ பாடசாலை மாணவர்களுக்கு 50% கழிவு
➤ ஏனையோருக்கு 25% கழிவு

மேலதிக விபரங்களுக்கு 021 222 3040 www.facebook.com/yaarlfitness www.instagram.com/yaarlfitness






LOOK GOOD. FEEL GOOD. LEVEL UP!


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட